# Salve Regina




SOCIETY OF ST. PIUS X

ஜனவரி - பிப்ரவரி 2009

மலர்: 4 இதழ்: 1 & 2

(துனிச்சுற்றுக்கு மட்டும்)



# கத்தோலிக்கத் திருச்சபையின் பாரம்பரியம் பிரிவினையோ, விலக்கப்பட்டதோ அல்ல!

வந். பெர்னார்டு ஃபெல்லே

வந். ரிச்சர்ட் வில்லியம்சன்

வந். அல்போன்ஸோ தே கலாரெட்டா

வந். திஸ்ஸியே தே மலாரே

# NOVA ET VETERA
# புதியவைகளும் பழையவைகளும்.

சேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

2009 - புத்தாண்டு புலர்ந்துவிட்டது. சர்வேசுரன் தமது மேலான இரக்கப் பெருக்கினால் ஒரு புதிய ஆண்டை நமக்கு தந்துள்ளார். இந்த புத்தாண்டு நமக்கு நம்பிக்கையின் ஆண்டாக - வரப்பிரசாதத்தின் ஆண்டாக திகழும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அதற்கான ஒரு சில நல்ல காரியங்கள் - அடையாளங்கள் நடைபெற்றுக் கொண்டு வருவதைக் காண்கிறோம்.

சென்ற மாதத்தின் ‘Salve Regina’ இதழில், வரும் காலங்களில் தாமதமின்றி பத்திரிகை வெளிவருவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்போம் என்று உறுதி அளிக்கப்பட்டது. ஆனாலும், விசுவாசிகளுக்கான தியானம், குருக்களுக்கான தியானம் போன்ற நிகழ்வுகள் காரணமாக இருந்தாலும் அவைகளை விட இன்றும் முக்கியமாக வத்திக்கானிலிருந்து பாரம்பரியத்திற்குச் சாதகமான, நவீனர்களுக்கு கலக்கத்தைத் தரக்கூடிய வகையில் வெளிவந்த பரபரப்பான செய்தியும் இவ்விதழ் பிந்த காரணமாக அமைந்துவிட்டது. இவ்விதழ் ஜன & பெப்ரவரி மாத இதழாக சற்று விரிவானதாக வெளிவருகிறது.

கடந்த ஜனவரி மாதம் 24ம் தேதி வத்திக்கானிலிருந்து நமது அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் நான்கு மேற்றிராணிமார்களின் திருச்சபை விலக்கம் அகற்றப்பட்டு விட்டது! என்ற செய்தி வெளிவந்தது. ஜனவரி 21-ம் நாளன்று மேற்றிராணியார்களுக்கான சங்கத்தால் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட ஆணை, முன்பு 1988 - ம் ஆண்டு ஜுன் 30-ம் தேதியன்று அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் குருக்கள் 4 பேரை மேற்றிராணிமார்களாக மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை பாப்பரசரின் உத்தரவில்லாமல் அபிஷேகம் செய்தார் என்று கூறி அவர்களின் திருச்சபை விலக்கத்தை அறிவித்து, வத்திக்கான் மேற்றிராணிமார்களுக்கான திருச்சங்கம் 1988 ஜுலை முதல் நாளன்று வெளியிட்ட ஆணையை திரும்ப பெற்றுக் கொண்டது. இது திருச்சபையின் பாரம்பரியத்திற்குக் கிடைத்திருக்கிற வெற்றியின் துவக்கம் என்று கருதப்பட்டாலும், இவ்வாணையைப் படிப்பவர்கள் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை மேற்றிராணிமார்களும், சபைக் குருக்களும் இவ்வளவு காலம் விலக்கப்பட்டவர்களாக இருந்தார்கள் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கும் என்று அஞ்சப்படுகிறது. இதனை தெளிவுபடுத்தும்படியாக, இவ்விதழின் நடுபகுதியில் சில விளக்கக் கட்டுரைகள் தரப்படுகின்றன.

மிக. வந். லெஃபவர் ஆண்டகையவர்கள் 1988 ஜுன் 30-ம் தேதியன்று, மேற்றிராணிமார்களை அபிஷேகம் செய்த போது நிகழ்த்திய பிரசங்கத்தில் “...பத்திரிகைகள்,பிரிவினை, திருச்சபை விலக்கம் என்று மனதார தலைப்புச் செய்திகளை வெளியிடும். இருந்தபோதிலும் நமக்கு எதிரான குற்றச்சாட்டுகள், தண்டனைகள் அனைத்தும் ஒன்றுமில்லை. செல்லாதவை. இவைகளை நாம் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை......பல வருடங்களில் - எவ்வளவு ஆண்டுகள் என்று அறியேன்; நல்ல ஆண்டவர் மட்டுமே, பாரம்பரியம் தனது உரிமைகளை உரோமையில் அடைந்துகொள்வதற்கு எவ்வளவு காலமாகும் என்பதை அறிவார் - நாம் உரோமைய அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படுவோம். நாம் நமது குருமடங்களில் குடும்பங்களில், சமுதாயத்தில், நாட்டில், நமது துறவற சபைகளில், மடங்களில் சர்வேசுரனின் அதிமிக மகிமைக்காகவும், ஆத்தும இரட்சண்யத்திற்காகவும் விசுவாசத்தைக் காப்பாற்றியதற்காக நன்றி கூறுவார்கள்!... ” என்று குறிப்பிட்டிருந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1990 செப்டம்பர் 6-ம் நாள் தமது சபை குருக்களுக்கு நிகழ்த்திய உரையில் “...ஒரு நாள் தமது சபை, ஞான பலத்தைத்தையும், விசுவாசத்தின் வலிமையையும் கொண்டிருக்கிறது என்பதை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு அவர்கள் (உரோமை அதிகாரிகள்) உள்ளாவார்கள். அவர்கள் பாரம்பரிய விசுவாசத்திற்குத் திரும்பி வந்த பிறகு, காப்பாற்றப்பட்ட விசுவாசத்தைப் பயன்படுத்தி ஆனந்தமும், திருப்தியும் அடைவார்கள்...” என்று கூறினார்.

மிக.வந். லெஃபவர் ஆண்டகை உரைத்த அந்த தீர்க்கதரிசனமான வார்த்தைகளில் நிறைவேற்றத்திற்கான ஆரம்பம் வந்துவிட்டதா? காலம் பதில் தரட்டும்.

திருச்சபைக்கு மிகுந்த நன்மை பயக்கத்தக்க இக்காரியத்தை பெற்றுத்தந்த பரிசுத்த ஜெபமாலை மாதாவிற்கு நன்றி செலுத்துவோமாக!

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**
**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**
**பாளையங்கோட்டை**



# TRADIDI QUOD ET ACCEPI
## “எதைப் பெற்றுக்கொண்டேனோ அதையே (உங்களுக்கு) அளித்தேன்”

*(வந். மார்செல் லெஃபவர் ஆண்டகையின் கல்லறையில் பொறிக்கப்பட்ட வார்த்தைகள்)*

# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்


## - அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -

(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல்" என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

## (8) புதிய வடிவத்தில் தேவதிரவிய அநுமானங்கள்! (தொடர்ச்சி)

## உறுதிபூசுதல்

*உறுதிப்பூசுதல் என்ற தேவதிரவிய அநுமானமும் இதே அவலநிலைக்கு உள்ளாயிருக்கிறது. உறுதிபூசுதலின் போது இப்போது சொல்லப்படும் வார்த்தைகள்: "சிலுவை அடையாளம் வரைகிறேன்; பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்" என்பதாக இருக்கின்றன. ஆனால் இந்த தேவதிரவிய அநுமானத்தை வழங்குபவர் இத்தேவதிரவிய அநுமானத்தால் தாமே வழங்கவிருக்கும் விசேஷ வரப்பிரசாதம் இஸ்பிரீத்துசாந்து வானவர் என்பதைக் குறிப்பிடாமல் விட்டுவிடுகிறார். இப்படி நிறைவேற்றப்படும் அநுமானம் செல்லத்தக்கது அல்ல.*



*இப்படிப்பட்ட தேவதிரவிய அநுமானம் நிறைவேற்றும் பொழுது என்ன நடக்கிறது என்று கவனித்த பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் பெற்ற தேவதிரவிய அநுமானம் செல்லுமா என்ற சந்தேகத்தினால் அல்லது அது செல்லத் தகாதமுறையில் கொடுக்கப் படும் என்ற பயத்தினால் என்னை (அதிமேற்றிராணியார் ஆண்டகை) அணுகி விண்ணப்பிக்கும் போது, அவர்களுக்கு நான் எப்பொழுதும் உதவி வருவேன். 1975-ம் ஆண்டில், கர்தினால் மார்கள் முன்னிலையில் விளக்கம்கொடுக்கும்போது, அவர்கள் என்னை இதற்காகக் கடிந்துகொண்டார்கள். இது போன்ற கண்டிப்புக்களை நான் பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முறையும் பத்திரிகை களின் மூலமாய் செய்கிறார்கள். ஆனால் நான் விசுவாசிக ளுடைய விருப்பங்களை நிறைவேற்றவே செய்தேன். இது ஒழுங்குமுறைக்கு எதிரான ஒரு காரியமாக இருந்தாலும், நான் இத்தேவதிரவிய அநுமானத்தை (உறுதிபூசுதல்) நிறைவேற்றவே செய்தேன். ஏனென்றால் நாம் ஒரு அசாதாரணமான சூழ்நிலையில் இருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் தேவச்சட்டமும் (Divine Law), இயற்கை விதியும் (Natural Law) திருச்சபையின் விதிகளுக்கு மேற் பட்டதாக இருக்கிறது. இது எப்படியென்றால், திருச்சபை விதி தேவ சட்டத்தையும், இயற்கைச் சட்டத்தையும் நமக்குத் தரும் வாய்க் கால்களாய் இல்லாமல் அதை எதிர்த்து நிற்பவையாக இருப்பதால் இது ஒரு அசாதாரணமான சூழ்நிலையாகத் திகழ்கின்றது. இச்சூழ்நிலைகளில் வழக்கமாக செய்யப்படுவதைவிட ஒரு மாற்று வழியைக் கையாண்டால் நாம் ஆச்சரியப்படக்கூடாது.*

*ஒரு தேவதிரவிய ஆநுமானம் செல்லும்படியாவதற்கு (Validity) தேவையான மூன்றாவது நிபந்தனை "சுத்த நேரிய கருத்து" (Right Intention) ஆகும். அதாவது தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றும் மேற்றிராணிமார்களுக்கும், குருக்களுக்கும் திருச்சபை செய்ய விரும்புவதைச் செய்யும் கருத்து இருப்பது அவசியம். பாப்பானவராக இருந்தாலும்கூட இதை மாற்றமுடியாது.*

*தேவதிரவிய அநுமானம் நிறைவேற்றப் போகும்போது, குருவானவருடைய விசுவாசம் இன்றியமையாத ஒன்றல்ல. ஒரு குருவோ, ஒரு மேற்றிராணியாரோ விசுவாசமற்றவர்களாய் இருக்கக்கூடும். சிலர் குறைபாடுள்ள விசுவாசத்தைக் கொண்டிருக்கலாம். இது அவர்கள் நிறைவேற்றும் தேவதிரவிய அநுமானத்தில் செல்லுபடியாகும் தன்மையை எவ்விதத்திலும் நேரடியாகப் பாதிப்பதில்லை. ஆனால் மறைமுகமான பாதிப்பை விளைவிக்கக்கூடும். திருச்சபை நிறைவேற்றும் கருத்து இல்லாமையால் ஆங்கிலிக்கன் சபை குருத்துவம் செல்லாது என்று பாப்பானவர் 13-ம் சிங்கராயர் எடுத்த முடிவை நாம் இங்கே நினைவுபடுத்திக்கொள்வோமாக. இதற்கு அவர்கள் விசுவாசத்தை இழந்ததே காரணம். சர்வேசுரன் மேல் கொண்டுள்ள விசுவாசம் மட்டுமல்லாமல், விசுவாசப்பிரமாணத்தில் அடங்கியிருக்கும் அனைத்து வேத*

*24 -ம் பக்கம் பார்க்க*

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (15) பிரகாசமாய் ஸ்துதிக்கப்பட யோக்கியமாயிருக்கிற கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

லத்தீன் மொழியின் 'Virgo Praedicanda' என்ற பதத்திற்கு "போதிக்கப்படத்தக்க கன்னிகை" என்று பொருள். அதாவது, உலகிற்கெல்லாம் அறியச்செய்து ஸ்துதிக்கப்படத்தக்க கன்னிகை என்ற அர்த்தம் கொள்ளலாம். ஆம்! திருச்சபை தேவதாயை - அவர்களது மகிமைகளின் பொருட்டு உந்நதமான வகையில் - பிரகாசமாய் ஸ்துதிக்க நம்மை அழைக்கிறது.

வரலாற்றில் தேவ அன்னையைப் போல் இப்படி மிக உயர்வாய் ஸ்துதிக்கப்பட - போற்றப்பட தகுதியான பெண்மணி வேறு யாரும் உண்டோ? இல்லை. ஏனெனில் சர்வேசுரனே மாதாவை "**பிரியதத்தத்தினால் பூரணமானவளே வாழ்க! ஆண்டவர் உம்முடனே வாசஞ்செய்கிறார்** " என்று கபிரியேல் சம்மனசின் மூலமாக ஸ்துதிக்கிறார்! என்னே தேவதாயின் மகிமை-உயர்வு!! அதுமட்டுமல் லாமல் தேவ இஸ்பிரீத்துசாந்துவானவர் அர்ச். எலிசபெத்தம்மாளின் வாயால் "**...பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே; உம்முடைய திருவயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே**". "**என் ஆண்டவருடைய தாய் என்னிடத்தில் எழுந்தருளிவர எனக்கு கிடைத்ததெப்படி**" என்று உரைக்கச்செய்து போற்றித் துதிக்கின்றார். அப்படியானால் மாதாவின் உயர்வை நம்மால் போதுமான அளவு உரைக்கவும் முடியுமா?



### மீட்புத் திட்டத்தில் மாதாவின் உயர்வு!

சர்வேசுரனின் மீட்புத் திட்டத்தில் மாதாவின் பங்கு மிகவும் இன்றியமையாததாக உள்ளது. ஏனெனில் அது தேவனால் நித்தியத்தி லேயேத் திட்டம் செய்யப்பட்டது. ஆகையால்தான் மாதாவின் மகிமை தங்க நூலிழையாக ஆதியாகமம் தொட்டு, இறுதியில் காட்சியாகமம் வரை ஊடுருவிச் செல்கிறது. எப்படியெனில், அவர்களே ஆதிசர்ப்பத்தின் - சாத்தானின் தலையை தமது குதிங்காலால் "**நசுக்க**" வல்லமை கொண்ட ஸ்திரீயாக சர்வேசுரனால் முன்னுரைக்கப்பட்டார்கள். அவர்களே சர்வேசுரனின் "**பிரியதத்தத்தினால் பூரணமானவர்களா**"கவும், "**ஸ்திரீகளுக் குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவர்களா**"கவும் (லூக். 1:28); "**எல்லாத் தலைமுறைகளும் பாக்கியவதியாக**" போற்றும் மாதரசியாகவும்; சேசு கிறீஸ்துவின் **முதல் புதுமையை பெற்றுத் தந்தவர்களாகவும்**, கல்வாரிமலையில் **மனுக்குலத்தின் தாயாக** மீட்பரால் வழங்கப் பட்டவர்களும்; இறுதியாக "**சூரியனை ஆடையாக அணிந்து**" மோட்சத்தில் மகிமையுடன் வீற்றிருப்பவர்களாகவும் பேறுபெற்றார்கள். இப்படிப்பட்ட மகிமையலங்காரம் பூண்ட மகா பரிசுத்த கன்னிமாதாவை போற்றி ஸ்துதிப்பது தகுதியான ஒன்று அல்லவா?

### தேவ அன்னையின் தகுதி!

பரிசுத்த கன்னிமரியாய் இப்படி பிரகாசமாய் போற்றி ஸ்துதிக்கப்பட வேண்டிய தகுதி எங்கிருந்து வந்தது? இதற்கு அர்ச். பெர்னார்டு பதில் கூறுகிறார்: "ஓ மரியே! உமது திருவயிற்றின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப்பட்டவர்; அதற்குக் காரணம் நீரல்ல, நீர் சகல ஸ்திரீகளுக்குள்ளும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதன் காரணமும் நீரல்ல - அது உமது திருக்குமாரனின் வரங்களே!" அதுமட்டுமல்லாமல், மாதா மகிமையோடு ஸ்துதித்துப் போற்றப்பட வேண்டியதன் யோக்கியம்பற்றி அர்ச். தமாஸ்சின் அருளப்பர் "கன்னிமாமரி சகலத்தையும் படைத்த சிருஷ்டிகரின் தாயாக ஏற்படுத்தப்பட்ட போதே அவர்கள் எல்லா சிருஷ்டிகளுக்கும் மேலாக - எஜமானியாக உண்மையாகவே உயர்ந்துள்ளார்கள்" என்று கூறுகிறார். இதுவே திருச்சபையின் பிதாபிதாக்கள் மற்றும் வேதசாஸ்திரியர்களின் கருத்தாகவும் உள்ளது.

இதனாலேயே தான் திருச்சபை பல்வேறு பொதுச் சங்கங்களில் கன்னிமரியாயின் மகிமைகளை அறுதியிட்டு அறிவிக்கிறது. கன்னிமாமரி "**சர்வேசுரனின் தாய்**" என்றும் (எபேசியுஸ் சங்கம்); **நித்திய கன்னிகை** என்று Lateran Synod சங்கமும் (கி.பி. 649) ஸ்துதிக்கிறது. அதோடு மட்டுமல்லாது எண்ணற்ற ஜெபங்களையும், அதிகமான திருநாட்களையும், தேவாலயங்களையும் ஏன் துறவற மற்றும் பக்த சபைகளையும் ஏற்படுத்தி மாதாவின் மகிமைகளை போற்றி ஸ்துதிக்கின்றது தாயாகிய திருச்சபை! எனவே திருச்சபையின் மக்களும், தேவதாயின் பிள்ளைகளுமான நாம் நமதன்னையின் மகிமை பெருமைகளை வியந்து போற்றி,

**"பிரகாசமாய் ஸ்துதிக்கப்பட யோக்கியமான கன்னிகையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்"**
என்று ஸ்துதிப்போமாக!

# தேவ ஆராதனை முறைமை

## தேவ ஆராதனைக்குரிய இடம்

### 1. தேவாலயம்

இது உலகிற்கெல்லாம் தெய்வீக அரசராகிய சர்வேசுரனுடைய மகத்துவம் பொருந்திய வாசஸ்தலம்; கிறீஸ்துவப் பிரஜைகள் ஒன்றுகூடி பலி ஒப்புக்கொடுக்கவும், தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொள்ளவும், இங்ஙனம் பகிரங்க கிறீஸ்தவ ஆராதனை நடத்தவும், பிரத்தியேகமாய் அமைக்கப்பட்ட பொது இடம்.

திருச்சபை ஆரம்பத்தில் அப்போஸ்தலர்களும் மேற்றிராணிமார்களும் கிறீஸ்தவர்களின் சொந்த வீடுகளிலும் "கட்டகோம்" என்ற தரைச் சுரங்கங்களிலும் பலி ஆராதனையை நிறைவேற்றி வந்தனர். வேத கலாபனைகள் ஒழிந்ததும் திருச்சபைக்குச் சுயாதீனம் ஏற்பட்டது. விசுவாசிகள் சுவிசேஷ போதகர்கள்மீதும், வேதசாட்சிகள் மீதும் தங்களுக்குள்ள பக்தியைக் காண்பிக்க வெகு அழகான ஆலயங்களை அமைத்தார்கள்.

தேவாலய அபிஷேகச் சடங்கு மிகவும் நேர்த்தியானது. பல சுத்திகரச் சடங்குகளைக்கொண்டு, மேற்றிராணியார் அசுத்த அரூபிகளைத் துரத்துகிறார்; பின்னர் கட்டடத்தின் வாசல்களையும் சுவர்களையும் கிறீஸ்மா என்னும் பரிமளத் தைலத்தால் அர்ச்சித்து, தம் பரலோக பரிவாரங்களுடன் சர்வேசுரன் வந்து வாசஞ்செய்யும் இடமாக அதை வசீகரஞ் செய்கிறார். அபிஷேகஞ் செய்யப்பட்ட பன்னிரு தூண்களும் (அல்லது சிலுவைகளும்) நமது விசுவாசத்தை நிலைநிறுத்தித் தாங்கி நிற்கும் பன்னிரு அப்போஸ்தலர்களைக் குறிக்கும். ஈண்டுக் கிறீஸ்துவே எழுந்தருளிவந்து இப்புதுக் கல்வாரிமலைமேல் தம்மைப் பலியிட்டு நமது போசனமாகி, நமது ஆறுதலும் இரட்சணியமுமாக நற்கருணை பேழையில் பிரசன்னமாயிருக்கிறார்.

மற்ற இடங்களைவிட தேவாலயம் நமது செபத்திற்கு அதிகப்பலனை அளிக்கக்கூடியது. வரிவேதத்தில் காணக்கிடக்கும் மோயீசனின் கூடாரங்களைவிட அதிகமாய்க் கடவுளுடைய மகத்துவத்தைத் துலங்கச் செய்யும் இத் தேவ சன்னிதியில் நாம் எவ்வளவு உயிருள்ள விசுவாசங் கொண்டவர்களாயிருக்கவேண்டும்!

### 2. நற்கருணைப் பெட்டி

இது சாதாரணமாய் நடுப்பீடத்தில்தான் அமைக்கப்பட்டிருக்கும்; ஏனெனில் நமது ஆராதனைக்கு நடுநாயகமாய் இருப்பது தேவ நற்கருணையே. உலோகத்தால் செய்யப்பட்டு உட்புறத்தில் பட்டுத்துணி தைக்கப்பட்டு அழகிய வேலைப்பாடுள்ளதாயிருக்கும். முன்புறத்தில் அன்றைய நாளின் பூசை உடுப்புகளின் நிறத்திற்கு ஒத்த வெளித்திரையொன்று தொங்கும். அரசருடைய சந்நிதானத்துக்குரிய இத்திரை எப்பொழுதும் தொங்கவேண்டும்.

எண்ணெய்த் தீபம் ஒன்றாவது இப்பேழைக்குமுன் எப்பொழுதும் எரியவேண்டும். நற்கருணை எம்மானுவேலின் மேல் கிறீஸ்தவர்களுக்குள்ள பக்தியானது என்றும் உயிருள்ளதாய்ப் பிரகாசிக்கவேண்டும் என்பதை இவ்விளக்கானது காட்டும்.

### 3. திருப்பீடம்

நமது திவ்விய இரட்சகர் கடைசி இராப்போசன வேளையில் தேவ நற்கருணையை உண்டாக்கும்போது அமர்ந்திருந்த மேசையே நமது முதல் பலிபீடம் எனலாம். ஆரம்பத்தில் திவ்விய பூசை கிறீஸ்தவர்களுடைய வீடுகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டதால் அங்கே மரத்தாற் செய்யப்பட்ட மேசைகளையே பீடங்களாகப் பெரும்பாலும் பயன்படுத்தினார்கள். வேதகலாபனை காலங்களில் வேதத்திற்காக இரத்தத்தால் சாட்சி சொன்ன வேதசாட்சிகளின் கல்லறைகளின்மேல் அல்லது அவற்றின் அருகே கற்பலகைகளின்மீது பலிப்பூசை நிறைவேற்றும் பழக்கம் உண்டாயினமையின் பிற்காலத்தில் கல்லாகிய பீடங்கள் ஏற்பட்டன. வேதசாட்சிகளுடைய கல்லறைகள் இல்லாத இடங்களில் அவர்களுடைய திருப்பண்டங்களைக் கொண்டுவந்து பீடக்கல்லின் மத்தியில் ஒரு சிறு குழி செய்து அவற்றை அதில் அடக்கஞ்செய்து, பலிபூசையை நிறைவேற்றி வந்தனர். கிறீஸ்துவுக்காகத் தங்கள் உயிரைப் பலியாகத் தியாகஞ்செய்தவர்களின் கல்லறை கிறீஸ்துவின் சிறந்த பலியாகிய இத்திவ்விய பூசை செய்வதற்குத் தக்க இடமாக எவ்வளவோ பொருந்தும் அன்றோ? கிறீஸ்து *"மூலைக்கல்லாக இருப்பதால்" (எபி.2:20)* பீடமும் கல்லால் செய்யப்பட்டுள்ளது.

தற்காலத்தில், அர்ச்சியசிஷ்ட கல் என்பது அப்பத்தையும் பாத்திரத்தையும் வைப்பதற்குப் போதிய அளவினதாய் செதுக்கப்பட்ட ஏறக்குறைய சதுரமான கற்பலகையாம். கிறீஸ்துவின் ஐந்து திருக்காயங்களை நினைப்பூட்ட ஐந்து சிறு சிலுவை அடையாளங்கள் இதன்மேற் செதுக்கப்பட்டிருக்கும். மிக நேர்த்தியான சுத்திகரச் சடங்குகளுக்குப் பின் கிறீஸ்மா பரிமளத் தைலத்தால் அபிஷேகஞ் செய்யப்பட்டும், இதன் நடுவிலுள்ள சிறுகுழியில் வேதசாட்சிகளின் திருப்பண்டங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இக்கல் இல்லாமல் ஒருபோதும் பூசை செய்யக்கூடாது. இதை எங்கும் எடுத்துச் செல்லலாம்; எனவே இதற்கு **"அசைபீடம்"** என்று பெயர் உண்டாயிற்று. கற்றூண்கள்மீது பலகைக்கல்லால் அமைந்த கல் பீடங்களுமுண்டு. இவையனைத்தும் ஒரே அபிஷேகம் பெற்று அசைக்கக்கூடாதபடி பொருத்தப்பட்டிருப்பதால் **"அசையாப்பீடம்"** என்று சொல்லப்படும்.

பீடத்தில் அற்புதமாய்ப் பலியாகும் ஆண்டவருடைய திருப்பாடுகளையும், கல்வாரிமலைப் பலியின் தொடர்ச்சியையும் ஞாபகப்படுத்த ஒரு **பாடுபட்ட சுரூபமும்**, இதில் நிறைவேறும் மகா உன்னத பலியின் வணக்கத்திற்காக **இரு தேன் வத்திகளும்** வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

நம்மைக் கிறீஸ்துவிடம் அழைத்துப்போகும் விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்ற புண்ணியங்களின் அடையாளமாகப் பீடத்தினடியில் மூன்று படிகள் அமைக்கப்பட்டுள்ளன.

# ஞான குழந்தைத்துவத்தின் சிறிய வழி!

(அர்ச். குழந்தை சேசு தெரேசம்மாள் காட்டிய ஞான குழந்தைத்துவம் (Spiritual Childhood) என்ற சிறிய வழியைப் பற்றிய விளக்கம். அர்ச். தெரேசம்மாளையும், அவளது சொந்த சகோதரிகளையும் நன்கு அறிந்தவரான சங். மார்டின் சுவாமி என்பவர் எழுதிய " The Little way of Spiritual Childhood" என்ற நூலின் தமிழாக்கம். ஆர்.)

**முதல் அத்தியாயத்தின் தொடர்ச்சி...**

### 2. சர்வேசுரனுக்கு நாம் எப்பேர்ப்பட்ட பிள்ளைகளாக இருக்கவேண்டும்?

*பரலோகத்தில் இருக்கிற நம் பிதா நமக்க எப்பேர்ப்பட்ட தகப்பனாக இருக்கிறார் என்பதைக் குறித்து ஏற்கனவே பார்த்தோம். அவருடைய பிள்ளைகளாக இருக்கிற நாம். அவரிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்?*

*ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் அனைவரும் ஒரே விதமாக இருப்பதில்லை, நடப்பதில்லை. பிள்ளைகளில் பெரியவர்கள் உண்டு. சிறியவர்கள் உண்டு; பிள்ளைகள் தங்கள் அவசியத்திற்கேற்பவோ, குணநலன்களுக்கு ஏற்பவோ தங்களுடைய தகப்பனுக்கு அருகிலோ, தூரத்திலோ வசிக்கிறார்கள்; அடிக்கடியோ அல்லது சிறிது காலத்திற்கு ஒரு முறையோ தங்கள் தந்தையை சந்திக்கச் சொல்கிறார்கள். நம்பிக்கையுடன் இப்படி தங்கள் தகப்பனிடம் செல்வதில்கூட குறைபாடு இருக்கலாம்.*



*இவர்களில் வளர்ந்த பெரியவர்களைப் போல அல்லாமல், சிறிய குழந்தையைப் போல -* Sicut Parvuli- *அவர்களுடைய மனநிலையுடன் தன்னிடம் நடந்துகொள்ள வேண்டும் என்று நம் நல்ல கடவுள் விரும்புகிறார்.*

*பாலர்களைப் போல்* "Sicut Parvuli" *என்ற வார்த்தையை நமதாண்டவரே சுவிசேஷத்தில் பயன்படுத்தி இருக்கிறார்.*

*"நீங்கள் மனந்திரும்பி, பாலர்களைப்போல் ஆகாவிட்டால், பரலோக இராச்சியத்திலே பிரவேசிக்கமாட்டீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 18:3).*

*"பாலர்களை நம்மிடத்தில் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்காதேயுங்கள்; ஏனெனில் சர்வேசுரனுடைய இராச்சியம் இப்படிப்பட்டவர்களுடையதாயிருக்கிறது" (மாற்கு. 10:14).*

*"ஆகையால் உங்களெல்லாரிலும் எவன் அதிக சிறியவனாயிருக்கிறானோ, அவனே அதிக பெரியவன்" (லூக்.9:48).*

*அதுமட்டுமல்லாமல் நமதாண்டவர் தன்னுடைய இந்த வார்த்தைகளை எல்லா வாய்ப்புகளின் போதும், தமது நடத்தையினால் உறுதிப்படுத்தியிருக்கிறார். சுவிசேஷத்தை சிறிதளவு படித்து அறிந்திருக்கிறவர்கள்கூட எப்படி சேசுநாதர் குழந்தைகள் தன்னிடம் வர விரும்பினார்; எப்படி அவர்களை தன் இருதயத்தோடு அணைத்து ஆசீர்வதித்தார் என்பதைக் கவனிக்கத் தவறமாட்டார்கள். இப்படியாக, எல்லா விதத்திலும் அவர் தனது வார்த்தையாலும் செய்கையினாலும் சிறு குழந்தைகள் மேலிருக்கும் தனது பாசத்தை காண்பிக்கிறார். இப்படிப்பட்ட பாசமும் நேசமும், சுபாவ ரீதியாக சிறு குழந்தைகளாய் இருப்பவர்களுக்கு மட்டுமன்றி, வரப்பிரசாத ரீதியிலும் இத்தன்மையைக் கொண்டவர்கள் மீதும் காண்பிக்கிறார். இவ்விருத்தன்மையானவர்களையும் ஒரே விதமாய் பாவித்து ஒரே மாதிரியான தனது சிநேகத்தைக் காட்டுகிறார். யூதேயா நாட்டின் சிறு குழந்தைகளை அவர் மிகவும் நேசித்தார். ஏனென்றால், இவர்கள் அவருடைய கண்களுக்கு ஞான குழந்தைத்துவத்தின் அடையாளங்களாகத் திகழ்ந்தன. இதுபோலவே, மறுபக்கத்தில் இந்த ஞான குழந்தைத்துவமானது அவருக்கு மிகவும் பிரியமான ஒன்றாக இருந்தது. அது எப்படியெனில் ஞான குழந்தைத்துவமானது குழந்தைகளுடைய இயல்பான அழகை, பிஞ்சு உள்ளத்தைக் கொண்டிருக்கிறது. "பாலர்களை நம்மிடத்தில் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்காதேயுங்கள்; ஏனெனில் சர்வேசுரனுடைய இராச்சியம் இப்படிப்பட்டவர்களுடையதாயிருக்கிறது" (மத். 18:3).*

*ஒரு ஆசிரியர் பாடத்தைக் கற்பிக்கும் போது பல வடிவங்களில் போதிக்கிறார். இப்படி பல வடிவங்களைப் பயன்படுத்துவது பாடத்தின் முக்கியமான கருத்தை வலியுறுத்தவே என்பதை நாம் உணர்ந்துகொள்வதில்லையோ? இதைப் போலவே நமதாண்டவர் தமது சீஷர்களுக்கு புரியவைக்க முயன்றார். இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியது*

என்னவெனில், நம் தெய்வீக போதகர், இந்த ஞான குழந்தைத்துவம் நித்திய ஜீவியத்தை அடைவதற்கு இன்றி யமையாத நிபந்தனை என்பதை தமது சீஷர்கள் கண்டு உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதையே!

இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஞான வாழ்வில் தன்னை ஒரு சிறு குழந்தையாய் மாற்றுவது நமதாண்டவரின் தெளிவான விருப்பமும், அவருடைய திரு இருதயத்தின் ஏக்கமுமாய் இருக்கிறது.

## 3. ஞான குழந்தைத்துவத்தின் சிறிய வழியில் நுழைவது என்பது என்ன?

அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாளின் சிறிய வழியின் நோக்கம் இதுதான். அதில் நுழைவது என்பது ஒரு சிறு குழந்தையின் சிந்திக்கும் விதத்தை அவர்களுடைய செயல்படும் முறையை நம் உள்ளரங்கத்தில் கடைப் பிடிப்பதும், அவர்கள் தங்களுடைய உலகத் தந்தையிடம் நடந்துகொள்ளும் முறையை நம் பரலோகப் பிதாவி னிடத்தில் எல்லாக் காரியங்களிலும் கடைப்பிடிப்பதும் தவிர வேறு ஒன்றுமில்லை. குழந்தைத்துவத்தின் பண்பு நலன்களை ஆத்துமத்தின் சுபாவத்திற்கு மேலான காரியங்களுக்கு மாற்றி, எப்படி சிறுபிள்ளைகள் தங்கள் பெற்றோர்களின் கண்காணிப்பின் கீழ் இருக்கிறார்களோ அப்படியே, எப்பொழுதும் சர்வேசுரனுடைய கண்களுக்கு முன்பாக வாழ்வதேயாகும்.

இந்த எளிய இலக்கணமானது ஒரு ஒப்புமையின் வழியாக போதுமான அளவு இச்சிறிய வழியை அறிந்து கொள்வதற்கு உதவுகிறது.

முதன் முதலில், ஒரு சிறு குழந்தையின் பண்பு நலன்கள் எவையென்றால்: அதனுடைய சிறிய தன்மை, பலவீனம், அதன் ஏழ்மை, எளிமை. தன்னிலேயே ஒரு குழந்தை எப்படிப்பட்டது? அது யார்? அதனிடம் இருப்பது என்ன? ஒன்றுமில்லை. அநேகமாக ஒன்றுமில்லை. எனவே, அதற்கு தன்னுடைய பெற்றோர்களிடமிருந்து வரும் உதவியல்லாமல் வேறு வழி இல்லை. தனியாக விடப் பட்டால் அதனிடம் ஒன்றும் இராது. அவர்களோடு (அதாவது பெற்றோர்களோடு இருக்கும்போது) அதற்கு குறை ஒன்றும் இராது. இவர்களிடமிருந்துதான் அச்சிறு உள்ளத்திற்கு முழு நம்பிக்கைப் பிறக்கிறது. இந்த நம்பிக்கை யானது தன்னையே அறியாமல் தன் பெற்றோர்களைச் சார்ந்திருக்க அதைத் தூண்டுகிறது. ஆகவே, எதைப் பற்றியும் முன் யோசனையோ பயமோ இல்லாமல் தன்னை முழுவதும் அவர்களுடைய பராமரிப்பிற்கு ஒப்புவித்து வருகிறது. இதைத் தான் சுய கையளித்தல் என்கிறோம்.

இந்த சிறு சிருஷ்டியின் உன்னதமான நம்பிக்கைக்கு பெற்றோர்கள், இடைவிடாத அக்கறையும், எவ்வித ஆபத்துக்களிலிருந்து பாதுகாக்க கவனமும், அதற்கு உபயோகமாக மகிழ்ச்சியைத் தரும் அனைத்தையும் தந்து மகிழ்கின்றார்கள். இந்த நன்மைகளுக்கு சிறு குழந்தை நன்றியற்ற விதமாய் இராது. தன்னால் இயன்ற முறையில், தனக்கே உரிய ஒரு வகையில் தனது பெற்றோர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றது. இக்குழந்தையின் வழி ஒரு எளிய வழி. அதே வேளையில் அது ஒரு உத்தமமான உன்னதமான வழி. பெற்றோர்கள் தந்த சகல நன்மைகளுக்கும் போதுமான அளவு கைமாறு தருகின்ற வழி!

சிறு குழந்தையானது புத்தியைப் பயன்படுத்தி சிந்திக்க இயலாததாக இருக்கிறது. ஆனால், அது மெய்யான விதத்தில் எளிமையான முறையில், தனக்கே உரித்தான விதத்தில் முழு உள்ளத்தோடு நேசிக்கின்றது. தன்னுடைய நினைவையெல்லாம் நேசிப்பதற்கு பயன்படுத்துகிறது என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியும்.

அச்சிறு குழந்தையைப் போல ஆவது, அதாவது அவர்களைப் போல சர்வேசுரனுக்கு முன்பு சிறியவர்களாய், பலவீனமுள்ளவர்களாய், ஏழைகளாய் நமது முழு ஆத்துமத் தோடு, அளவற்ற நம்பிக்கையோடு சென்று, நம்மை முழுவதுமாக அவரிடம் கையளித்து, இறுதியாக எல்லா வற்றையும்விட அவரை நேசித்து, நம் சக்திக்கு உட்பட்ட முறையில் நேசித்து, நம்முடைய நேசத்தைக் காண்பிக்க எவ்வித வாய்ப்பையும் நழுவ விடாமல் பயன்படுத்த வேண்டும். நல்ல சர்வேசுரனின் பிள்ளைகள் இவ்வுலகில் இச்சிறு குழந்தைகள் போல் நடக்க வேண்டும். இப்படி வாழ்வதற்கே அர்ச். குழந்தை சேசுவின் தெரேசம்மாள் தன்னுடைய சிறிய வழியில் நடக்க ஆசிப்பவர்களை அழைக்கிறாள்.

எனவே, நாம் செய்யவேண்டியது ஏதெனில், இச்சிறு குழந்தையின் பண்பு நலன்களைப் பின்பற்றி பாலர்களைப் போல வாழ்வதே.

இச்சிறு குழந்தையின் பண்புகளை நாம் அறிந்துகொள்வது, இந்த சிறிய வழியின் இரகசியத்தை கற்றுக்கொள்ள நமக்கு உதவும்.

(தொடரும்)

## புதிய கத்தோலிக்க குருவிடமிருந்து . . .

டிசம்பர் 27, 2008, இந்நாளில் தான் நான் பல வருடங்களாய் கொண்டிருந்த ‘‘ தேவ அழைத்தல்’’ என்ற விதையானது, வளர்ந்து ‘‘குருத்துவம்’’ என்ற கனியைத் தந்தது. நம் ஆண்டவராகிய சேசு கிறீஸ்துவின் நித்திய குருத்துவமானது, நீண்ட கால பயிற்சிக்குப் பிறகு எனக்கு அருளப்பட்டிருக்கிறது. இக்காலங்களில் எனக்கு அதிகப்படியான ஜெபங்களும், பரித்தியாகங்களும் தேவைப்பட்டன..... அதை விசுவாசிக ளாகிய நீங்கள் எனக்காக நிறைய செய்திருக்கிறீர்கள். நீங்கள் மிக தாராளமாக செய்த இந்த ஞான உதவிகளுக்காக உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சர்வேசுரன் உங்களை அபரிதமாக ஆசீர்வதிப்பாராக !



**சங். கிரகோரி நொரேனா சுவாமி.**

# ‘Sanguis Martyrum Semen Christianorum’

## (வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

(இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது சத்திய கத். விசுவாசத்தில் உறுதியாக இருந்து பதிதத்தை மறுத்து தங்களுடைய இன்னுயிரை நீத்தவர்களின் வரலாறு இங்கே வெளியிடப்படுகிறது.)

## (6) அர்ச். ஹென்றி வால்போல் (St. Henry Walpole. S.J.)

### தேவ அழைத்தல்

தமது அன்புக்குரிய சங். காம்பியன் சுவாமியின் வேதசாட்சியத்தைப் பார்த்ததிலிருந்து ஹென்றியின் உள்ளம் மாறிப்போனது. அவரைப் போலவே தாமும் விசுவாசத்தைக் காக்கவேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் எழத் துவங்கியது.

காம்பியனின் வாழ்வு, அவரது மரணம் பற்றிய நினைவுகள் மனதில் எழ அவைகளை கவிதையாக எழுதினார். “**மிகவும் புகழ்பெற்ற புண்ணியம் நிறைந்த குருவான எட்மண்ட் காம்பியனின் வாழ்வும் மரணமும் பற்றிய கல்லறை வாசகம்**” என்ற தலைப்பில் 30 பத்திகளைக் கொண்ட கவிதைத் தொகுப்பாக அது உருவெடுத்தது. அதன் இரு பத்திகள் கீழேத் தரப்பட்டுள்ளன:


(அர்ச். ஹென்றி வால்போல்)

“. . . அவர் வார்த்தைப்பாட்டால் வந்தார் பாவத்தை வென்றிடவே;
அவரது ஆயுதம் ஜெபமே, வார்த்தைகளோ காக்கும் கேடயமே;
மோட்சமே அவரது ஆறுதல், ஆனமாக்களை வெல்வதே அவரது ஆவல்;
பசாசே அவரது எதிரி, பாவ உலகமே அவரது படைக்களம்;
மகிழ்ச்சியே அவரது வெற்றி, நித்திய இன்பமே அவரது கூலி;
கிறீஸ்துவே அவரது தலைவர், முடிவில்லா காலமுமாகவே்
அவருக்கு வரப்பிரசாதங்களை அருளிய சர்வேசுரன் ஸ்துதிக்கப்படுவாராக:
தமது வேதசாட்சிகளை வாழ்த்திய கிறீஸ்துவுக்கு நன்றி என்றுமே்
எஜமானரின் திருமுகதரிசனமே அவரது மகிழ்ச்சி;
அவரை எதிரியாகப் பாவித்தவர்களுக்குச் சாபமே
இத்தகைய மனிதரை தோற்றுவித்த கிறீஸ்துவின் நாமமே, எந்நாளும்
வாழ்த்தப்பட நமக்குக் கடனே. . . ! ”

அவரது இந்த கவிதை தொகுப்பை ஹென்றி வாலேன்கர் (Henry Vallenger) என்ற செல்வந்தர் வெளியிட முன்வரவே அது அச்சிட்டு கத்தோலிக்க மக்களிடையே விநியோகிக்கப்பட்டது. அதன் ஒரு நகல் அரசின் கைகளில் சிக்கவே வந்தது ஆபத்து. உடனே அனைத்து பிரதிகளையும் கைப்பற்றி அழிக்க உத்தரவுப் பிறப்பிக்கப்பட, அச்சிட உதவிய ஹென்றி வாலேன்கர் பிடிபட்டார். கொடிய வாதனைகளிலும் எழுதியவரின் பெயரை வெளியிட மறுத்துவிட்ட அவருக்கு 100 பவுண்ட் பணம் அபராதம் விதிக்கப்பட்டு அவரது இரு காது மடல்களும் வெட்டப்பட்டன! கவிதை பிரதிகளை வைத்திருந்ததற்காக பல கத்தோலிக்க இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே விடுதியில் பணியாற்றி வந்த ஹென்றி வால்போல் தமது சக தோழர்களிடையே காம்பியன் சுவாமியின் வீர வைராக்கிய மரணத்தைப்பற்றி எப்போதும் எடுத்துக்கூறவே, அவர்களில் அநேகர் கத். விசுவாசத்தில் உறுதிப்பெற்றனர். அதனாலேயே அரசாங்கத்தின் சந்தேகப் பார்வை ஹென்றியின் மீது விழத் துவங்கியது. கவிதை எழுதியது அவர்தான் என்ற சான்று அரசுக்கு எழவே, கைதாவதிலிருந்து தப்பிக்க விடுதியிலிருந்து வெளியேறி தமது சொந்த Norfolk வீட்டிற்குச் சென்றார். இதற்கிடையில் அரசின் தேடுதல் வேட்டைத் துவங்கவே, சிலநாட்கள் பதுங்கு குழியில் பதுங்கி வாழ்ந்து வந்த அவரது உள்ளத்தில் காம்பியன் சுவாமியைப் போல குருவாக வேண்டும், அவரைப் போலவே தமது நாட்டில் கத். விசுவாசத்தை மீண்டும் மலரச் செய்ய உழைக்கவேண்டும் என்ற எண்ணம் உறுதியடையத் துவங்கவே, இரவுபகலாக காடுகளில் மறைந்து நடந்தே New Castle என்ற இடத்திற்கு வந்துசேர்ந்து பிரான்ஸ் நாட்டுக் கப்பலில் பயனித்து Rheins நகருக்கு 1582 ஜுலை 7-ம் நாள் வந்து சேர்ந்தார். பின்னர் Douai நகர் வந்து அங்குள்ள ஆங்கில கல்லூரியில் சேர்ந்து குருத்துவக் கல்வியை பெறலானார். கர்தினால் ஆலன் ஆண்டகையின் ஆதரவைப் பெற்று Rheins நகரில் 8 மாதங்கள் வேதசாஸ்திரம் கற்ற அவர் 1584 பிப்ரவரி 2-ம் நாளன்று தமது 26-வது வயதில் சேசுசபையில் உட்பட்டார். அங்கே ஆயத்தநிலை தயாரிப்பில் இரு வருடங்கள் செலவிட்டபின், குருத்துவக் கல்வியில் தொடர்ந்து, தமது 30-வது வயதில் 1588 டிசம்பர் 17-ல் பாரீசில் குருப்பட்டம் பெற்றார். Brussels அனுப்பப்பட்ட அவர், வேதம் போதிக்கும் ஆவலால் அதற்கான பயிற்சியைப் பெற்று,

தொடர்ச்சி 20 – ம் பக்கம் . . .

# அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையின் அதிசிரேஷ்டர் வெளியிட்ட செய்தி!



**(16-ம் ஆசீர்வாதப்பர் பாப்பானவருடன் வந். பெர்னார்டு ஃபெல்லே ஆண்டகை)**

*அதிமேற்றிராணியார் மிக.வந். மார்செல் லெஃப்வர் ஆண்டகையவர்களால் 1988 ஜுன் 30-ம் நாளன்று, அபிஷேகம் செய்யப்பட்ட மேற்றிராணிமார்களை திருச்சபை விலக்கம் செய்து 1988 ஜுலை முதல் தேதியன்று மேற்றிராணியார் களுக்கான திருசங்கம் வெளியிட்டதும், எப்போதும் நாங்கள் மறுத்து வந்துள்ளதுமான ஆணையை பரி. பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பரின் உத்தரவின் பேரில், அதே சங்கம் மற்றொரு ஆணையின் மூலமாக 2009, ஜனவரி 21-ம் நாளன்று திரும்பப் பெற்றுள்ளது.*

*அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபைக்கு மட்டுமல்லாமல், திருச்சபை முழுவதற்குமாக நன்மை பயக்கக்கூடிய இந்த செயலுக்காக பரி. பாப்பரசருக்கு எமது பிள்ளைக்குரிய, நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். எமது சபை, முன்பு எப்போதுமில்லாத வகையில் தற்போது கத்தோலிக்க உலகத்தை நிலைகுலையச் செய்துவருவதும், பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பரால் "மௌனமான விசுவாச மறுதலிப்பான நிலை" என்று குறிப்பிடப்பட்டதுமான, குழப்ப நிலையை நிவர்த்தி செய்வதற்கு பாப்பரசருக்கு எப்போதும் அதிகமாக உதவிட விரும்புகிறது.*

*பரி. பாப்பரசருக்கு எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர் இந்தத் திடமான காரியத்தைச் செய்ய, அவருக்கு உதவியாக இருந்தவர் களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். ஜனவரி 21-ம் நாளது ஆணையானது, பரிசுத்த ஸ்தானத்துடனான 'பேச்சு வார்த்தையை' நடத்துவது அவசியம் எனக் கருதுவதையும் குறித்து மகிழ்கின்றோம். இந்த பேச்சு வார்த்தை திருச்சபையின் தற்போதைய பிரச்சினைகளுக்கு, ஊற்றாக இருப்பதாக நம்புகிற காரணங்களை விளக்கிக் கூற அர்ச். பத்தாம் பத்திநாதர் சபைக்கு வழிவகுக்கும்.*

*இந்தப் புதிய சூழ்நிலையில், விரைவில் கத்தோலிக்கப் பாரம்பரியத்தின் உரிமைகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று திடமாக நம்புகிறோம்.*

**மென்ஸிங்கன்**
**2009, ஜனவரி 24.**
**+ பெர்னார்டு ஃபெல்லே.**

# அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை அதிசிரேஷ்டரின் மடல்

அன்பார்ந்த விசுவாசிகளே,

இணைக்கப்பட்டுள்ள பத்திரிகை வெளியீட்டில், நான் அறிவித்தபடி, "அதிமேற்றிராணியார் மிக.வந். மார்செல் லெஃபவர் ஆண்டகையவர்களால் 1988 ஜூன் 30-ம் நாளன்று அபிஷேகம் செய்யப்பட்ட மேற்றிராணிமார்களை திருச்சபை விலக்கம் செய்து 1988, ஜூலை முதல் தேதியன்று மேற்றிராணிமார்களுக்கான திருச்சங்கம் வெளியிட்டதும், எப்பொழுதும் நாங்கள் மறுத்து வந்துள்ளதுமான ஆணையை, பரி. பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பரின் உத்தரவின் பேரில், அதே சங்கம் மற்றொரு ஆணையில் மூலம் 2009, ஜனவரி 21-ம் தேதியன்று திரும்பப் பெற்றுள்ளது". 2008-ம் ஆண்டு கிறீஸ்து அரசர் திருநாளன்று லூர்துபதியில், உங்களிடம் கேட்டுக்கொண்ட ஜெபக்கருத்தும் இதுதான். உங்களது பதில் எங்களது எதிர்பார்ப்புகளையும்விட அதிகமாக இருந்தது. எப்படியெனில் பதினேழு லட்சத்து, மூவாயிரம் ஜெபமாலைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டு நமதாண்டவளின் பரிந்து பேசுதலின் மூலமாக அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் மேற்றிராணிமார்களையும் கடந்து, பாரம்பரியத்தில் பற்று கொண்ட அனைத்து விசுவாசிகளின் மேல் சுமத்தப்பட்ட அவதூறு, முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. பரிசுத்த தந்தையை இத்தகைய தன்னிச்சையான, நன்மையான, திடமான காரியத்தைச் செய்யும்படியாக உணர்த்திய, மகா பரிசுத்த கன்னிகைக்கு நாம் நன்றி சொல்ல மறவாதிருப்போமாக, பாப்பானவருக்கும் நமது ஜெபங்களை வாக்களிப்போமாக.

இந்த செயல்பாட்டினால், உலகமெங்குமுள்ள, பாரம்பரியத்தில் பற்று கொண்டுள்ள கத்தோலிக்கர்கள் இனிமேலும் அநியாயமாய் வேதனைப்படுத்தப்படமாட்டார்கள், தங்களின் மூதாதையர்களின் விசுவாசத்தைக் கடைபிடித்து வருவதற்காக கண்டனம் செய்யப்படமாட்டார்கள். இனி கத்தோலிக்கப் பாரம்பரியம் விலக்கப்பட்ட ஒன்றல்ல. தன்னிலேயே அவ்வாறு இல்லாவிட்டாலும், அது அன்றாட நடைமுறையில் கொடூரமாக நீக்கிவைக்கப்பட்டிருந்தது. எப்படி திரிதெந்தீன் திவ்விய பலிபூசை தன்னிலே ஒரு போதும் தடைசெய்யப்பட்ட ஒன்றில்லையோ அதுபோலத்தான்!? இதனையே பாப்பரசரும் தமது 2007, ஜூலை 7-ம் நாளைய தன்னிச்சையான ஆணைமடலில் குறிப்பிட்டிருந்தார்.

2009, ஜனவரி 21-ம் நாளன்று வெளியிடப்பட்ட ஆணை,கர்தினால் கஸ்டிரிலோன் கோயோஸ் ஆண்டகைக்கு, நான் டிசம்பர் 15-ம் தேதி எழுதிய கடிதத்தின் சில வரிகளை மேற்கோள் காட்டுகிறது. அதில் நமதாண்டவர் சேசு கிறீஸ்துவின் திருச்சபையான கத்தோலிக்கத் திருச்சபையின் மீதான நமது பற்றை வெளிப்படுத்தி, அதனுடைய 2000 வருடத்திய போதனைகளை நாம் ஏற்றுள்ளதையும், அர்ச். இராயப்பரின் முதன்மை ஸ்தானத்தின் மீது நமக்கிருக்கும் விசுவாசத்தையும் மறுபடியும் உறுதிபடுத்தினேன். மேலும் அக்கடிதத்தில் இந்த பாரம்பரிய போதனைகளும், பாப்பரசரின் முதன்மை ஸ்தானமும் இன்றைய திருச்சபையில் ஏளனத்திற்கு உள்ளாவதால் நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் வேதனையையும் நினைவுபடுத்தினேன். அத்துடன் நாங்கள் எங்களுடைய இரத்தத்தைக் கொண்டு விசுவாச பிரமாணத்தை எழுதவும், நவீனத்தை எதிர்க்கும் வார்த்தைபாட்டிலும் 4-ம் பத்திநாதரின் விசுவாச அறிக்கையில் கையொப்பமிடவும் தயாராக இருக்கிறோம் எனவும், முதலாம் வத்திக்கான் சங்கம் வரையிலான அனைத்து சங்கங்களின் போதனைகளையும் ஏற்று அவற்றை நமதாக்கிக்கொண்டுள்ளதையும், ஆனால் மற்ற சங்கங்களிலிருந்து வேறுபட்டு இருக்க விரும்பிய 2-ம் வத். சங்கத்தின் (23-ம் அருளப்பர் மற்றும் 6-ம் சின்னப்பரின் வார்த்தைகள்) பேரில் தயக்கமும், வேறுபாடான எண்ணங்களும் கொள்ளாமல் இருக்க முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தேன். இவைகளெல்லாம் நாங்கள் எமது ஸ்தாபகர் மிக.வந். அதிமேற்றிராணியார் மார்செல் லெஃபவர் ஆண்டகையவர்கள் கோடிட்டுக் காட்டிய நடைமுறைகளுக்கு பிரமாணிக்கமாய் இருக்கின்றோம் என்று நம்புகிறோம். அன்னாரின் கீர்த்தி விரைவில் நிலைநிறுத்தப்படும் என்று நம்புகிறோம்.


இவைகளின் விளைவாக, ஆணை,'அவசியம்' என்று ஒப்புக்கொண்டிருக்கிற "பேச்சுவார்த்தைகளை" எக்காலத்திற்கும் இருக்கக்கூடிய திருச்சபையின் ஆசிரியத்திற்கு எதிரானவைகளின் வேதசாஸ்திர சம்பந்தமானவைகளைப் பற்றிய பேச்சுவார்த்தைகளைத் தொடங்க விரும்புகிறோம். இன்று திருச்சபையை உலுக்கிக்கொண்டிருக்கும் குழப்பங்களான: தேவ அழைத்தல் அரிதாகி வருதல், துறவற - ஞான வாழ்வில் பிரச்சினைகள், ஞானோபதேசம் கற்றுக்கொள்ளாதிருத்தல், தேவதிரவிய அநுமானங்களை முறையாகப் பெறாதிருத்தல் போன்றவைகளை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது. நமக்கு முன் 6-ம் சின்னப்பர், "சில விரிசல்கள் வழியே சாத்தானின் புகை திருச்சபையினுள் நுழைந்துவிட்டது" என்று சொல்லும் அளவிற்குச் சென்றதையும், அவரே "திருச்சபையின் சுய அழிவைப்" பற்றி பேசியதையும்; 2-ம் அருள் சின்னப்பர் "ஐரோப்பாவில் கத்தோலிக்கம் மௌனமான வேதமறுதலிப்பு நிலையில் இருக்கிறது" என்று சொல்லத் தயங்காததையும் அறிவோம். பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பரோ, அவர் அர்ச். இராயப்பரின் அரியணைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு சற்று முன்பாக, திருச்சபையை "எப்பக்கமிருந்தும் தண்ணீர் உள்ளே நுழையும் ஒரு படகுக்கு" ஒப்பிட்டிருந்தார். ஆகையால், உரோமை அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையின் போது, திருச்சபையின் தற்போதைய நிலைக்கான ஆழ்ந்த சரியான காரணங்களை ஆராய்ந்து அவைகளுக்கான சரியான திருத்தங்களைக் கொண்டுவந்து திருச்சபை நீடித்த புதுப்பித்தலை பெற்றுக்கொள்ள விரும்புகிறோம்.

அன்பார்ந்த விசுவாசிகளே, திருச்சபை அதனுடைய தாயாகிய மகா பரிசுத்த கன்னிமரியாயிடம் இருக்கிறது. அவர்களில் நாம் நமது நம்பிக்கையை வைப்போம். அவர்களிடமே எக்காலத்துக்கும் உரிய திவ்விய பூசையை எல்லா இடங்களிலும், எல்லோருக்கும் தரப்படுவதற்கான சுதந்திரத்தைக் கேட்டோம். அவர்களிடமிருந்தே திருச்சபை விலக்க ஆணையை திரும்பப் பெறுதலையும் கேட்டோம். இப்பொழுது அவர்களிடமிருந்தே குழம்பிப்போன ஆன்மாக்களுக்கு மிக தேவையான வேதசத்திய விளக்கங்களைத் தரும்படி ஜெபிப்போம்.

**மென்சிங்கன், ஜனவரி 24, 2009**

**+ பெர்னார்டு ஃபெல்லே.**

# மேற்றிராணியார்களுக்கான திருச்சங்கத்தின் ஆணை.



2008, டிசம்பர் 15-ம் தேதி "Ecclesia Dei"என்ற பாப்பரசர் குழுமத்தின் தலைவரான மிக. வந். கர்தினால் தாரியோ காஸ்திரியோன் ஹோயோஸ் ஆண்டகைக்கு, வந். பெர்னார்டு ஃபெல்லே ஆண்டகை, தனது சார்பாகவும், 1988, ஜுன் 30-ம் நாளன்று அபிஷேகம் செய்யப்பட்ட மற்ற மூன்று மேற்றிராணிமார்கள் சார்பாகவும் எழுதிய கடிதத்தின் மூலமாக, 'latae sententiae excommunicatio' என்ற, 1988 ஜுலை முதல் தேதியன்று முறையாக (formally) மேற்றிராணியார்களுக்கான திருச்சங்கம் வெளியிட்ட ஆணையின் மூலம் விதிக்கப்பட்ட ன்ற திருச்சபை விலக்கத் தண்டனையை விலக்கிக்கொள்ளுமாறான தமது வேண்டுதலை புதுப்பித்திருந்தார். மேற்கூறிய இக்கடிதத்தில் சொல்லப்பட்ட பல விஷயங்களில் ஒன்று பின்வருமாறு : "என்றும் கத்தோலிக்கராய் இருக்கவும், நமதாண்டவராகிய சேசுக்கிறீஸ்துவின் திருச்சபையாகிய உரோமைய கத்தோலிக்கத் திருச்சபையின் ஊழியத்திற்கு எங்களை முழுவதும் அர்ப்பணிக்கவும், நாங்கள் எப்பொழுதும் உறுதியான மனதுடன் இருக்கிறோம். கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளை பிள்ளைக்குரிய மனதுடன் ஏற்றுக்கொள்கிறோம். அர்ச். இராயப்பருடைய முதன்மையையும் அந்த ஸ்தானத்தினுடைய மேலான உரிமைகளையும் ஏற்றுக்கொள்கிறோம்; இந்த நிலைப்பாட்டிற்காக தற்போதைய சூழ்நிலை எங்களை அதிக துன்பங்களுக்கு உட்படுத்துகிறது என்று வலியறுத்தியிருந்தார்."

சம்பந்தப்பட்டவர்கள், வெளிப்படுத்தியிருக்கும் திருச்சபை விலக்கத் தண்டனையினால் ஏற்பட்டுள்ள ஞான இடையூறுகளை தகப்பனுக்குரிய அக்கறையோடு நோக்கிய பரி. பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பர் மேற்கூறிய கடிதத்தின் வழியாக, விவாதத்திற்கு திறந்திருக்கும் காரியங்களில் பரிசுத்த ஸ்தானத்துடனான பேச்சுவார்த்தையை ஆழப்படுத்த தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வோம்; இதன் மூலம் விரைவில் பல பிரச்சினைகளுக்கு திருப்திகரமான தீர்வுகாண முயல்வோம் என்று வெளிப்படுத்தியிருப்பதால், வந். பெர்னார்ட் ஃபெல்லே, வந். திஸ்ஸியே தே மலாரே, வந். ரிச்சர்ட் வில்லியம்சன், மற்றும் வந். அல்போன்ஸோ தே கலாரெட்டா ஆகிய மேற்றிராணிமார்களுடைய அபிஷேகத்தால் ஏற்பட்ட திருச்சட்ட நிலையை (canonical situation) பரிசீலிப்பதற்கு முடிவு செய்தார்.

இந்தச் செயலின் மூலமாக, பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கவும் அர்ச். 10-ம் பத்திநாதர் சபைக்கும் பரிசுத்த ஸ்தானத்திற்குமுள்ள உறவை திடப்படுத்தி நிலையானதாக்கவும் விரும்பப்படுகிறது. கிறீஸ்து பிறப்பு காலத்தின் முடிவிலிருக்கிற நேரத்தில் தரப்படும் இந்த சமாதானப்பரிசு, அகில திருச்சபையில் சிநேகத்தின் ஒற்றுமையை ஊக்குவிக்க ஒரு அடையாளமாகவும், பிளவினால் ஏற்பட்ட துர்மாதிரிகையை வெல்லும் முயற்சியாகவும் இருக்குமென கருதப்படுகிறது.

இதைத் தொடர்ந்து, அர்ச். 10-ம் பத்திநாதர் சபை முழுவதுமாக திருச்சபையுடனான முழு ஐக்கியத்தை விரைவில் ஏற்படுத்திக்கொள்ளும் என நம்பப்படுகிறது; இதன் மூலம் மெய்யான பிரமாணிக்கமும், பாப்பரசருடைய ஆசிரியத்தையும், அதிகாரத்தையும் அங்கீகரித்து, காணக்கூடிய வெளியரங்க ஒற்றுமைக்கு சான்று தருவார்களாக.

பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பரால் எனக்கு விசேஷமாக அருளப்பட்ட அதிகாரத்தின்படி, இந்த ஆணையின் மூலம், வந். பெர்னார்டு ஃபெல்லே, வந். திஸ்ஸியே தே மலாரே, வந். ரிச்சர்ட் வில்லியம்சன் மற்றும் வந். அல்போன்ஸோ தே கலாரெட்டா ஆகியோர் மீதான 'latae sententiae excommunicatio' என்ற, 1988 ஜுலை முதல் தேதி மேற்றிராணியார்களுக்கான திருச்சங்கம் அறிவித்த 'திருச்சபை விலக்கத்தை' நான் தள்ளுபடி செய்து, இந்த நாளிலிருந்து அது எவ்வித சட்டரீதியான விளைவுகளும் அற்றது என்று அறிவிக்கிறேன்.

2009. ஜனவரி 21-ம் நாள்,

உரோமை மேற்றிராணியார்களுக்கான திருச்சபை சங்கத்திலிருந்து,

**கர்தினால் ஜியேவானி பாத்திஸ்தா ரே,**

தலைவர், மேற்றிராணியார்களது திருச்சங்கம்.

# அதிமே. மிக.வந். லெஃபவர் ஆண்டகையின் 1974-ம் ஆண்டு அறிக்கை.

( 1974, நவம்பர் 21–ல் வெளியிடப்பட்டது)

**1974-ம் ஆண்டு நவம்பர் 11-ம் நாளன்று, உரோமையிலிருந்து இரண்டு அப்போஸ்தலிக்க ஆய்வாளர்கள் ஈக்கோனிலுள்ள அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் சர்வதேச குருமடத்தை ஆய்வுசெய்ய வந்தனர். அங்கு தங்கியிருந்த ஒரு சில நாட்களில், "திருமணம் ஆன நபர்கள் குருப்பட்டம் பெறுவது சாதாரண காரியமாகிவிடும், நிலைத்த மாறாத உண்மை என்பது எதுவுமே இல்லை, நமதாண்டவரின் உயிர்ப்பு சந்தேகத்துக்குரியது" போன்ற தப்பறையான கருத்துக்களை குருமாணவர்களிடமும், குருமட பேராசிரியர்களிடமும் கூறினார்கள். அவர்களின் இந்த அவதூறுகளுக்கு எதிராக, நவீனத்தை மறுத்து அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகையவர்கள் இந்தப் புகழ்பெற்ற அறிக்கையை வெளியிட்டார்.**

"கத்தோலிக்க உரோமாபுரியை முழு இருதயத்துடனும் முழு மனதுடனும் நாம் உறுதியாகப் பற்றிக்கொண்டுள்ளோம். நித்திய உரோமாபுரியை, ஞானத்திற்கும் சத்தியத்திற்கும் ஆசிரியையாயிருந்து, கத்தோலிக்க விசுவாசத்தினுடையவும் அதைக் காப்பாற்றுவதற்குத் தேவையான பாரம்பரியத்தினுடையவும் பாதுகாப்பாக இருக்கிற உரோமாபுரியை நாம் திடமாகப் பற்றிக்கொண்டுள்ளோம்.

"ஆனால் நவீன, புராட்டடஸ்டாண்ட் சார்பான உரோமாபுரியைப் பின்பற்ற மறுக்கிறோம். எப்போதும் மறுத்தே வந்திருக்கிறோம். இந்த நவீன புராட்டடஸ்டாண்ட் சார்பு 2-ம் வத்திக்கான் சங்கம் நடைபெற்ற போதும், அதற்குப் பிறகும், அதிலிருந்து புறப்பட்ட எல்லா சீர்திருத்தங்களிலும் இது மிகத் துலக்கமாகக் காணப்படுகிறது.

"இதன் விளைவாக, இந்த சீர்திருத்தங்கள் திருச்சபையின் அழிவிற்கு ஏதுவாகிக்கொண்டே வருகின்றன. குருத்துவத்தின் அழிவிற்கும், திவ்விய பலி பூசை, தேவதிரவிய அநுமானங்களின் அகற்றுதலுக்கும், துறவற வாழ்வு மறைவிற்கும் ஏதுவாகியுள்ளது. பல்கலைக் கழகங்களிலும், குருமடங்களிலும், ஞானோபதேசத்திலும், இயற்கைவாத, தெயார் தே ஹார்தான் (Teilhard De Chardin) பாணியிலான கல்விக்கு ஏதுவாகியுள்ளன. இந்த வகைப் போதனையானது விடுதலை மனப்பான்மை, புராட்டஸ்டாண்டிசம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டது; இது திருச்சபையின் போதக ஆசிரியத்தால் (Magisterium) பலமுறை கண்டிக்கப்பட்டது.

"19 நூற்றாண்டுகளாக மிகத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டு, திருச்சபையின் ஆசிரியத்தால் அனுசரிக்கப்பட்டு வந்துள்ள நம் கத்தோலிக்க விசுவாசத்தை, விட்டுவிடவோ அல்லது அதைக் குறைக்கவோ எந்த அதிகாரமும், திருச்சபையின் மிக உயர்ந்த அதிகாரமும்கூட நம்மை வற்புறுத்த முடியாது. "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல் நாங்களாவது, பரலோகத்திலிருந்து வருகிற தேவதூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவான்" (கலா. 1:8).

"இதையன்றோ, பரிசுத்த தந்தை இன்று நமக்கு மீண்டும் கூறி வருகிறார். அவருடைய வார்த்தைகளிலும், செயல்களிலும் உரோமை திருச்சங்கங்களின் செயல்பாடுகளிலும் ஒருவகையான முரண்பாடு இருக்குமானால், அப்போது நாம், எப்போதும் நமக்குக் கற்பிக்கப்பட்டு வந்துள்ளவற்றை ஏற்றுக்கொண்டு, திருச்சபையை அழிக்கிற நவீனங்களுக்குக் காதுகொடுக்க மறுப்போம்.

"விசுவசிக்கும் நியதி (Lex credendi) மாற்றமடையாமல் வழிபடும் நியதியை (Lex orandi) ஆழமாக மாற்றம் செய்வது முடியாத காரியம். புதிய பூசைக்கு ஏற்ற புதிய ஞானோபதேசம், புதிய குருத்துவம், புதிய குருமடங்கள், அருங்கொடை, பெந்தகோஸ்தலிசம் ஆகியவை தோன்றியுள்ளன. இவையெல்லாம் உண்மையான விசுவாசக் கொள்கைக்கும், மாறுபடாத திருச்சபையின் போதகத்திற்கும் எதிராக உள்ளன. விடுதலை வாதத்திலிருந்தும் நவீன கொள்கையிலிருந்தும் புறப்பட்டு வந்துள்ள இந்த சீர் திருத்தம் முழுவதும் விஷம் ஏறியதாக, பழுதுபட்டதாக உள்ளது. இச்சீர்திருத்தத்தின் எல்லா செயல்களும் வெளிப்படையான பதிதமாக இல்லாவிடினும் அவை பதிதத்திலிருந்து பிறந்து பதிதத்திற்கே கொண்டு செல்கின்றன.

"ஆதலால் இந்த சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்வதும், எவ்வகையிலேனும் அதற்கு பணிந்துகொடுப்பதும், மனச்சாட்சியுள்ள எந்தக் கத்தோலிக்கனாலும் கூடாததாயிருக்கிறது. நாம் இரட்சணியம் அடைவதற்கு ஏதுவாக திருச்சபைக்கும் கத்தோலிக்க சத்தியத்திற்கும் பிரமாணிக்கமாயிருக்கவேண்டுமானால், இந்த சீர்திருத்தத்தை திடமாக மறுத்துவிட வேண்டும்.

"ஆகவேதான், நாம் புரட்சி செய்யாமல், கசப்பில்லாமல், வெறுப்புகொள்ளாமல், என்றும் மாறாத திருச்சபையின் போதக ஆசிரியத்தின் வழிகாட்டுதலில் குருக்களை உருவாக்கும் அலுவலைத் தொடருகிறோம். கத்தோலிக்கத் திருச்சபைக்கும் பரிசுத்த பிதா பாப்பரசருக்கும் வருங்கால சந்ததிகளுக்கும் இதைவிடப் பெரிய ஊழியம் செய்யப்பட முடியாது என உறுதியாக எண்ணுகிறோம்.

"இதனாலேயே நாம் திருச்சபையால் ஒரே சீராகப் போதித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறதும், நவீனம் புகுவதற்கு முன் வெளியான புத்தகங்களில் முறைப்படுத்தி எழுதப்பட்டுள்ளதுமான விசுவாசம், நல்லொழுக்கம், தேவ வழிபாடு, ஞானோபதேசம், குருக்களை உருவாக்குதல், திருச்சபையின் நிறுவனம் ஆகியவற்றிற்கு ஏதுவானவற்றையெல்லாம் நித்திய உரோமையை மறைத்திருக்கிற இருளை பாரம்பரியத்தின் உண்மையான ஒளி அகற்றும் வரையிலும் திடமாகப் பற்றிக்கொள்வோம்.

"சர்வேசுரனுடைய வரப்பிரசாதத்தாலும், பரி. கன்னிமரியம்மாள், அர்ச். சூசையப்பர், அர்ச். 10-ம் பத்திநாதர் இவர்களின் உதவியாலும் இப்படி நாம் செய்யும் போது, ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் இராயப்பரின் வாரிசில் வரும் அனைத்து பாப்புமார்களுக்கும் நாம் பிரமாணிக்கமுள்ளவர்களாக இருக்கிறோமென்றும், இஸ்பிரீத்துசாந்துவானவரில் "சர்வேசுரனுடைய பரம இரகசியங்களைப் பகிர்ந்து கொடுக்கிறவர்களாக" (1 கொரி. 4:1) இருக்கிறோமென்றும் நிச்சயமாயிருக்கிறோம். ஆமென்."

**+ மார்செல் லெஃபவர்**

# அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை மேற்றிராணிமார்கள் ஒருபோதும் திருச்சபை விலக்கம் பெறவில்லை!

## – விளக்கம் –

மிகவும் வந். அதிமேற்றிராணியார் மார்செல் லெஃபவர் ஆண்டகையும், வந்.மேற்றிராணியார் அந்தோணியோ தா காஸ்ட்ரோ மேயர் ஆண்டகையும் அர்ச். 10-ம் பத்திநாதர் சபை குருக்கள் 4 பேரை 1988, ஜூன் 30-ம் நாளன்று மேற்றிராணிமார்களாக அபிஷேகம் செய்தார்கள். அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகையவர்கள் தமது இச்செயலை, திருச்சபையில் நிலவி வந்த குழப்பநிலையின் காரணமாக எழுந்துள்ள அவசியத்தை முன்னிட்டே செய்ததாக பல்வேறு சமயங்களில் தெளிவு படுத்தினார்.

அதே ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதியன்று வத்திக்கானின் மேற்றிராணிமார்களுக்கான திருச்சங்கம், பாப்பானவரின் உத்தரவு இல்லாமல் இவ்வாறு அபிஷேகம் செய்தலானது, ஒரு பிரிவினைவாதச் செயல் என்றும், இதில் பங்குபெற்ற 6 மேற்றிராணிமார்களும் தானாகவே திருச்சபை விலக்கம் என்ற தண்டனைக்கு உள்ளாகிறார்கள் என்று அறிவித்தது. மேலும் இந்த சட்ட அறிக்கை, 'பிரிவினையின் காரணமாக' நடத்தப்பட்ட அபிஷேகத்தை ஆதரிப்பவர்களும் "திருச்சபை விலக்கம்" என்ற தண்டனையால் எச்சரிக்கப்படுகிறார்கள் என்கிறது. ஜூலை 2-ம் தேதியன்று பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பர் தமது "Ecclesia Dei Afflicta" என்ற மடலில் மறுபடியும், திருச்சட்டத்தை மேற்கோள் காட்டி, பிரிவினை மற்றும் திருச்சபை விலக்கம் என்ற குற்றச்சாட்டைத் தெரிவித்தார். ஆனால் இந்த பிரிவினையோ அல்லது திருச்சபை விலக்கம் என்ற தண்டனையோ எப்போதேனும் உண்மையாகவே இருந்ததா?

### திருச்சபை சட்டம் அதிகாரச் சாதனமாகக் காட்டப்படுகிறது!

மேலே குறிப்பிட்ட இரண்டு செயல்களிலும் (பிரிவினை மற்றும் திருச்சபை விலக்கம்) திருச்சபை சட்டம் மேற்றிராணிமார்களை தானாகவே திருச்சபை விலக்கம் (Ipso facto) என்ற தண்டனையைக் கொடுத்ததே தவிர பாப்பரசரின் அதிகாரத்தினால் அல்ல. எனவே "இவர்களை பாப்பானவர் திருச்சபை விலக்கம் செய்தார்" என்று சொல்லுவது சரியல்ல. (அப்படி செய்யப்பட்டாலும் அது முறையற்ற விதமாய், பாப்பானவர் லிபேரியூஸ் அர்ச். அத்தனாசியாரை திருச்சபை விலக்கம் செய்தது போல இருக்கும்). ஆகவே, திருச்சட்டத்தால் திருச்சபை விலக்கம் கொண்டுவரப்பட்டதால், மெய்யாகவே மேற்றிராணிமார்கள் இத்தண்டனையைப் பெற்றார்களா, அர்ச். 10-ம் பத்திநாதர் சபை இதன்கீழ் வருமா என்பதை திருச்சட்டத்தை ஆராய்ந்து பார்ப்பதின் மூலம் அறியலாம்.

### திருச்சபை சட்டம் அதிகாரச்சாதனமாகக் காட்டப்படுகிறது!

1. ஒருவன் தேவையை முன்னிட்டு ஒரு சட்டத்தை மீறுவானாகில் அவன் தண்டனைக்கு உட்படமாட்டான். (திருச்சட்டம் 1323-4)

ஆனால் அவசரமோ அல்லது அவசியமோ இல்லாதிருந்தாலும், ஒருவன் அப்படிப்பட்ட அவசியம் இருப்பதாக தன்னிடத்தில் எவ்வித தவறுமின்றி நினைத்தால் அவன் அதற்கு உரிய தண்டனையை பெறமாட்டான். (திருச் சட்டம் 1323-7).

ஒருவன் அப்படிப்பட்ட அவசியம் இருப்பதாக தவறாக, ஆனால் குற்றமுள்ள வகையில் நினைத்தாலும்கூட அவன் தானாகவே அத்தண்டனையைப் பெறமாட்டான். (திருச்சட்டம் 1324-1,8)

2. ஒரு சட்டத்தை அல்லது கட்டளையை வெளிப்படையாக மீறிய எவரும், தீய நோக்கம் அல்லது குற்றமுள்ள தன்மையின் காரணமாக மிக கனமான முறையில் அவர்மேல் குற்றப்பொறுப்பு சுமத்தப்படக்கூடியதாக இருந்தாலன்றி தண்டிக்கப்படுவதில்லை. எவ்வி குற்றமுமின்றி 4ல் அல்லது 5ல் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளில் ஏதாவது ஒன்று இருந்தால் தண்டனைக்கு உட்பட மாட்டார்கள். (திருச்சட்டம் 1321-1, 1323-7)

> **"..... ஒரு மேற்றிராணியார் என்ற முறையில், கத்தோலிக்கக் குருத்துவம் தொடர்வதை உறுதிப்படுத்த மேற்றிராணிமார்களை அபிஷேகம் செய்ய சர்வேசுரன் முன்னிலையில் எனக்குக் கடமையிருக்கிறது....."**
>
> - மிக. வந். லெஃபவர் ஆண்டகை.

அதிமேற்றிராணியார் மார்செல் லெஃபவர் ஆண்டகை தான் ஒரு மேற்றிராணியார் என்ற முறையில், கத்தோலிக்கக் குருத்துவம் தொடர்வதை உறுதிப்படுத்த மேற்றிராணிமார்களை அபிஷேகம் செய்ய சர்வேசுரன் முன்னிலையில் தனக்கு கடமையிருக்கிறது என்று தெளிவாக சொல்லியிருக்கிறார். அப்படியே வந். லெஃபவர் ஆண்டகை செய்தது தவறாக இருந்தாலும்கூட இங்கு தன்னிலே சாவான பாவம் ஏதுமில்லை.

இதன் விளைவாக "திருச்சபை விலக்கம்" என்ற தண்டனை அறிவிக்கப்பட்டிருப்பது முறைகேடானது, எனவே அது செல்லத்தக்கது அல்ல.

# அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபை எப்பொழுதேனும் பிரிவினை நிலையில் இருந்ததா?

*"பாப்பரசரின் உத்தரவின்றி மேற்றிராணியாரை அபிஷேகம் செய்வது, தன்னிலே ஒரு பிரிவினை செயல் அல்ல".*



பாப்பரசர் 12 ம் பத்திநாதருடன் வந். மார்செல் லெபவர் ஆண்டகை

*திருச்சட்டத்திற்கு சரியான வியாக்கியானம் தருவதற்கு பொறுப்பான பாப்பானவருடைய குழுமத்தின் தலைவரான கர்தினால் லாரா ஆண்டகை, 1988, அக்டோபர் 7-ம் நாளில் கூறியது:*

**பாப்பானவரின் உத்தரவின்றி செய்யப்படும் மேற்றிராணிமார்களின் அபிஷேகச் செயல் ஒரு பிரிவினை செயலாக மாறாது.** இவ்வகையான செயல்களை திருச்சட்டமானது பகுதி II (குறிப்பிட்ட குற்றங்களுக்கான தண்டனைகள்) தலைப்பு IIIன் (திருச்சபை அலுவல்களின் தகாதமுறை உரிமைப்பறிப்பு மற்றும் அவற்றைச் செயல்படுத்துவதில் குற்றங்கள்) கீழ் வைக்கிறதேயல்லாமல் தலைப்பு I ன் கீழ் (சமயத்திற்கும் திருச்சபையின் ஒற்றுமைக்கும் எதிரான குற்றங்கள்) வைக்கவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு தலைப்புகளுமே நூல் VI ன் கீழ் (திருச்சபையில் தண்டனைகள்) வருகிறது.

*[இங்கே எந்த வகையில் பார்த்தாலும் அதிமேற்றிராணியார் கனமான குற்றம் செய்யவில்லை. அவரே பிரசங்கங்களிலும் பேட்டிகளிலும் குறிப்பிட்டபடி, திருச்சபையின் அவசியம் கருதியும், வயோதீகத்தைக் கருத்தில் கொண்டும், திருச்சபையில் குருத்துவத்தைக் காக்க எல்லா முயற்சிகளையும் செய்த பிறகுதான் தமது சபை குருக்கள் நாள்வருக்கும் 'மேற்றிராணியார் அபிஷேகம்' செய்து வைத்தார். இதில் எந்த தவறும் - தண்டனையும் வழங்கப்பட தேவையில்லை. ஒரு வாதத்திற்காக சொல்வோமேயானால் அவரது செயல் 'கீழ்ப்படியாமை' என்பதாக வேண்டுமானால் இருக்கலாமே தவிர அவரது செயல் 'பிரிவினை' அல்ல. எனவே திருச்சபை விலக்கம் என்ற கொடூர தண்டனை அவசியமில்லை. (ஆ-ர்) ]*

"கீழ்ப்படியாமை" பிரிவினை என்ற செயலாகாது. பாப்பானவரின் அதிகாரத்தை அங்கீகரிக்க மறுத்தால்தான் அங்கு பிரிவினை இருக்கும். அதிலும் மார்செல் லெஃபவர் ஆண்டகை எப்பொழுதுமே பாப்பரசருடைய அதிகாரத்தை அங்கீகரித்தே வந்திருந்தார். இதையே அர்ச். 10-ம் பத்திநாதர் சபையும் இன்றுவரை செய்து வருகின்றது.


பாப்பானவருடைய உத்தரவின்றி மேற்றிராணிமார்கள் அபிஷேகம் செய்யப்பட்டு அவர்களுக்கு மேய்ப்பு அதிகாரம் (Jurisdiction) கொடுக்கப்பட்டால் (அதாவது அவர்கள் ஆளுகை செய்ய மேற்றிராசனம் கொடுக்கப் பட்டால்) அது ஒரு பிரிவினை செயல். ஆனால், வந். லெஃபவர் ஆண்டகையவர்கள் ஒருபோதும் அப்படி செய்யவில்லை. தான் அபிஷேகம் செய்தது தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றவே. மேற்றிராணியாரின் கடமைகளாகிய உறுதிபூசுதல் மற்றும் குருத்துவத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் என்று அவர் தெளிவாகவே கூறியிருந்தார்.

*உரோமையிலிருந்தே நமக்கு முடிவான சான்று தரப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போல, அர்ச். 10-ம் பத்திநாதர் சபையை ஆதரிப்பவர்களும் தானாகவே திருச்சபை விலக்கம் என்ற தண்டனையைப் பெறுவார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் 1993 ஜுன் 28-ம் நாள் அப்போதைய வேதசத்திய சங்கத்தின் தலைவராக இருந்த கர்தினால் ராட்சிங்கர் (இப்போது பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பர்) ஹவாய் நாட்டு மேற்றிராணியார் வந். ஃபெனராரிய்யோ என்பவர் 1991-ம் ஆண்டு மே 1-ம் தேதியன்று 6 கத்தோலிக்கர்களை "திருச்சபை விலக்கம்" செய்து அறிவித்த ஆணையை ரத்து செய்தார். இந்த '6' கத்தோலிக்கர்களுடைய குற்றம் என்னவெனில், அர்ச். 10-ம் பத்திநாதர் சபை குருக்கள் செய்யும் பூசைகளில் பங்கு பெறுவதும், இச்சபை மேற்றிராணியாரிடமிருந்து உறுதிபூசுதல் தேவதிரவிய அநுமானத்தை பெற்றுக்கொண்டதும்தான்!*

*மேலே சொன்ன இந்த நிகழ்வு ஒன்றே 4 மேற்றி ராணிமார்கள் பற்றியும், அர்ச். 10-ம் பத்திநாதர் சபையைப் பற்றியும் கூறப்படும் "பிரிவினை" என்ற குற்றச்சாட்டு செல்லத் தக்கது அல்ல என்று நிரூபனம் செய்ய போதுமானவை!*

**"கத்தோலிக்க உரோமாபுரியை முழு இருதயத்துடனும் முழு மனதுடனும் நாம் உறுதியாகப் பற்றிக் கொண்டுள்ளோம்."**

– 1974 –ம் ஆண்டு அறிக்கையில் மிக. வந். லெஃபவர் ஆண்டகை.



# அதிமேற்றிராணியார் மிக.வந். மார்செல் லெஃபவர் ஆண்டகையின் வாழ்க்கைச் சுருக்கம்.

***1905 நவம்பர் 29 :*** மார்செல் லெஃபவர் பிரான்ஸ் நாட்டின் லீல் (Lille) என்ற ஊரில் பக்தியுள்ள கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தார்.

***1929 -*** ரோமையிலுள்ள பிரெஞ்ச் குருமடத்தில் குருத்துவக்கல்வி பயின்று குருப்பட்டம் பெற்றார்.

***1932 - 1946*** திவ்ய இஸ்பிரீத்துசாந்து குருக்கள் சபையில் சேர்ந்து ஆப்பிரிக்கா நாட்டின் காபோன் மாநிலத்திற்கு வேத போதகக் குருவாக அனுப்பப்பட்டார்.

***1947 - 1962*** இதற்கிடையில் மேற்றிராணியாராக அபிஷேகம் பெற்று செனிக்கல் நாட்டு டாக்கா (Dakar Senegel)பகுதியின் அப்போஸ்தலிக்க பதிலாளாகவும்(Vicar), பின்னர் ஆப்பிரிக்காவில் பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானாதிபதியாகவும் பணியாற்றினார். இறுதியில் டாக்கார் மேற்றிராசனத்தின் முதலாவது அதிமேற்றிராணியாராகவும் ஏற்படுத்தப்பட்டார். அங்கே அநேக கத்தோலிக்க ஸ்தாபனங்களை ஏற்படுத்தியவர், தங்கள் சொந்த மேற்றிராசனங்களின் குருக்களாக்குவதற்கு ஆப்பிரிக்க நாட்டு இளைஞர்களைத் தயாரித்தார்.

***1962*** பிரான்ஸ் நாட்டில் த்தூல் (Tulle) மேற்றிராசனத்தின் மேற்றிராணியாராக பாப்பரசரால் நியமிக்கப்பட்டார். 6 மாதங்களுக்குப் பிறகு திவ்ய இஸ்பிரித்துசாந்து குருக்கள் சபையின் அதிசிரேஷ்டராக தேர்வு செய்யப்பட்டார்.

***1962 - 1965 ல் 2-ம் வத்திக்கான் சங்கம் :*** 1960-ல் கூட்டப்படவிருக்கும் 2-ம் வத்திக்கான் சங்கத்திற்கான தயாரிப்பு குழுவில் அமர்த்தப்பட்டார். சங்கத்தின் முதல் அமர்விலேயே நவீனர்கள் சங்க நடைமுறைகளையும், செயல்பாடுகளையும் கைப்பற்றி, சங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களை (Schemas) தயாரிக்கத் தொடங்கினார். சங்கத்தில் நவீனத்தை எதிர்த்துப் போராட கத். பாரம்பரியத்தை விரும்பும் சங்கத்தந்தையர்களைக் கொண்ட coetus Internationale Patrum என்ற சிறு குழுவை உருவாக்கினார்.

***1968 - 1969*** தாம் சார்ந்திருந்த குருக்கள் சபையின் துறவியர்கள் நவீனக் கொள்கைகளை விரும்பியதால் தமது அதிசிரேஷ்டர் பதவியிலிருந்து இராஜீனாமா செய்தார். எஞ்சிய வாழ்வை ஓய்விலும், ஜெப வாழ்விலும் செலவிட விரும்பி ரோமையில் தங்கயிருந்தவரை, பாரம்பரிய குருமடப் போதனைகளை விரும்பிய, நவீனத்தால் பாதிக்கப்பட்ட குருமாணவர்கள் சிலர் சந்தித்து தங்களது, பாரம்பரிய குருத்துவ பயிற்சிக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டனர். அதுவே தேவ சித்தம் என்பதை உணர்ந்த லெஃபவர் ஆண்டகை அதற்கான ஒரு இல்லத்தைத் திறந்தார்.

***1969*** சுவிட்சர்லாந்து நாட்டில் ஈக்கோனில் பாரம்பரிய குருமடத்தை நிறுவி, அதற்காக அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையை திருச்சபையின் முறையான அங்கீகாரத்துடன் ஸ்தாபித்தார். அதன் முதலாவது அதிசிரேஷ்டராக 1982-ம் ஆண்டு வரை செயல்பட்டார்.

***1970 - 1988*** உலக நாடுகலெங்கிலும் பயணம் செய்து கத்தோலிக்க மக்களை தங்களது பாரம்பரிய கத். விசுவாசத்தில் உறுதியாயிருக்க ஊக்கப்படுத்தியும், உறுதிபூசுதல் தேவ திரவிய அனுமானங்களைக் நிறைவேற்றியும், அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை குருமடத்தில் பயின்ற புதிய குருக்களுக்கு குருப்பட்டமும் கொடுத்தும் வந்தார்.

***1976 - ஜூலை மாதத்தில்*** நவீன அதிகாரிகள் Divine என்ற குருத்துவப்பணியிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டார். ஆனால் அது திருச்சபையின் சட்டப்படியானதாக இல்லாததாகவும், எந்த விதமான விசாரணையின்றி, விசேஷத் தீர்ப்புக் கடிதம் (Forma specifica letter)கூட வெளியிடப்படாமல் தண்டனை விதிக்கப்பட்டார்.

***1988 - ஜூன் 30*** ல் திருச்சபையில் கத். பாரம்பரியமும் குருத்துவமும் காப்பாற்றப்படுவதற்காக அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் 4 குருக்களை மேற்றிராணியார்களாக அபிஷேகம் செய்தார். இச்செயல் திருச்சபைச் சட்டத்திற்கு விரோதமானது என்று தீர்ப்பிடப்பட்டு, அவரும் அவரால் அபிஷேகம் செய்யப்பட்ட 4 மேற்றிராணிமார்களும் சுயமாகவே திருச்சபை விலக்கம் பெற்றுக் கொண்டார்கள் என்று அறிவிக்கப்பட்டார்கள்.

***1991 மார்ச் 25:*** “நான் எதைப் பெற்றுக் கொண்டேனோ, அதனை வழங்கியிருக்கிறேன்” என்ற உத்தம கத்தோலிக்க மேற்றிராணியாரின் கடமையை செவ்வனே நிறைவேற்றிய அதிமேற்றிராணியார் மிக. வந்.மார்செல் லெஃபவர் ஆண்டகை அவர்கள் பாக்கியமான மரணமடைந்தார்.

# அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் வரலாற்றுச் சுருக்கம்.

***1970 நவம்பர் 1 :*** *இச்சபை சுவிட்சர்லாந்தின் ஃபிரிபார்க் மற்றும் ஜெனிவா மேற்றிராசனத்தின் மேற்றிராணியாராக வந். பிரான்ஸ்கி ஷி ங்செரியே ஆண்டகையவர்களால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது. இது 20 நூற்றாண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் இருந்த வந்த பாரம்பரிய முறைமையின்படி பரிசுத்த குருக்களை உருவாக்குதலையே தமது அப்போஸ்தலிக்க அலுவலாகக் கொண்டுள்ளது. இது சீயோன்* (Sion) *மேற்றிராணியாரான வந். நெஸ்டர் ஆடம் ஆண்டகையின் அங்கீகாரத்துடன் சுவிட்சர்லாந்து, வாலே மகாணத்தில் ரீட் என்ற பகுதியிலுள்ள ஈக்கோன் என்னுமிடத்தில் அர்ச். 10 -ம் பத்திநாதர் சர்வதேச குருமடத்தைக் கொண்டுள்ளது.*

***1971 பெப்ருவரி 18*** *அர்ச்.10-ம் பத்திநாதர் குருக்கள் சபைக்கு திருச்சபையின் பரிசுத்த ஸ்தானம்* (Holy See) *தனது அனுமதியை வழங்கியது. சர்வதேச தகுதி தந்து அங்கீகரித்தது. பின்னர் இச்சபை குருக்களையும், குருமாணவர் களையும் தன்னிடத்தில் ஏற்றுக்கொள்ள* (Incardination) *அனுமதிக்கப்பட்டது. உலகின் பல மேற்றிராசனங்களில் தனது மடங்களை ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டது.*

***1971 ஜுன் 10:*** *அதிமேற்றிராணியார் மிக.வந். லெஃபவர் ஆண்டகை, புதிய பூசை விசுவாசத்திற்கும், குருத்துவத்திற்கும் அபாயத்தைத் தரும் வகையில் விசுவாச சத்திய* (Doctrinal)*குறைவைக் கொண்டுள்ளது என்பதால், அர்ச். 10-ம் பத்திநாதர் சபைக் குருக்கள், அதனை (புதிய முறையிலான பூசையை) செய்ய மாட்டார்கள் என்று அறிவித்தார்.*

***1973 - 1974*** *அர்ச். 10-ம் பத்திநாதர் சபை 1973-ம் ஆண்டு வசந்த காலத்தில் அமெரிக்காவில் தமது முதல் இல்லத்தை ஏற்படுத்தி அங்கே 1974-ல் ஒரு குருமடத்தையும் நிறுவியது.*

***1975 மே 6 :*** *திருச்சபையில் ஊடுருவியிருந்த விசுவாசமற்ற நவீனர்களான* (Liberal) *அதிகாரிகள், அர்ச். 10-ம் பத்திநாதர் சபை திருச்சபைக்குள் புகுத்தப்பட்டுள்ள நவீன மாற்றங்களுக்கு விரோதமானது என்று கண்டுணர்ந்து அதற்கு விரோதமாகச் செயல்பட்டனர். இச்சபை திருச்சபைச் சட்டத்துக்கு விரோதமானது தவறானது என்பது போன்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்கள். ஆயினும் இச்சபை குருக்களையும், துறவியரையும் உருவாக்குவதில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தது.*

***1987 டிசம்பர் 11:*** *திருச்சபையின் அப்போஸ்தலிக்க ஆய்வாளராக கர்தினால் கானியன் ஆண்டகை* (Gagnon) *ஈக்கோன் குருமடத்திற்கு ஆய்வு செய்ய வந்தார். அங்கே குருமாணவர்கள் ஒழுக்கத்திலும் பாரம்பரிய கத்தோலிக்க முறையின்படியும் உருவாக்கப்படுவதிலும், செயல்படுகளினாலும் முழுவதுமாக ஈர்க்கப்பட்டார். 'விலக்கப்பட்டவர்' என்ற முத்திரைக் குத்தப்பட்ட அதிமேற்றிராணியார் லெஃபவர் ஆண்டகை நிறைவேற்றிய திவ்ய பலிபூசையிலும் கர்தினால் கானியன் ஆண்டகை பங்கேற்று தமது முழு திருப்தியை வெளிப்படுத்தினார்.*

***1988 ஜுன் 30*** *உரோமையிலுள்ள நவீனர்களுடனான பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்ததையடுத்து "பாரம்பரியத்தைக் காக்கும் அலுவல்"* (Operation Survival For Tradition) *என்ற செயல் தொடங்கியது. ஆம்! அதிமேற்றிராணியார் மிக.வந். லெஃபவர் ஆண்டகையும், மேற்றிராணியார் வந். காஸ்ட்ரோ மாயர் ஆண்டகையும், திருச்சபையில் கத்தோலிக்க பாரம்பரியம் தொடர்வதையும், அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் குருக்களை உருவாக்கும் அலுவல்களையும் தொடர்ந்து செயல்படுவதையும் உறுதி செய்யும் விதமாக சபையின் 4 குருக்களை மேற்றிராணியார்களாக அபிஷேகம் செய்து வைத்தார்.*

***1995 நவம்பர் 1*** *இச்சபை தனது 25-ம் ஆண்டின் நிறைவின் போது, உலகமெங்கிலுமுள்ள 27 நாடுகளில் 140 குருக்கள் இல்லங்களும், 4 மேற்றிராணிமார்கள், 360 குருக்கள், 50 சகோதரர்கள், 120 கன்னியர்கள், 53 அர்ப்பண கன்னியர்களைக் கொண்டிருந்தது!*

***2000 ஆகஸ்ட்:*** *அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபை ஜுபிலி ஆண்டை சிறப்பிப்பதற்காக ரோமைக்கு 6000 கத்தோலிக்கர்களைக் கொண்ட திருயாத்திரையை வழிநடத்தியது. இது அந்த ஆண்டில் ரோமைக்கு திருயாத்திரையாக வந்த 2வது மிகப்பெரிய திருயாத்திரையாகும். இந்த பாரம்பரிய திருயாத்திரையின் விசுவாசமும், ஒழுங்கும், நேர்த்தியும் ரோமையின் அதிகாரிகளைக் கவர்ந்தது. இது எவ்வளவுக்கென்றால், கர்தினால் ஹோயோஸ்* (Hoyos) *ஆண்டகை, அர்ச்.10-ம் பத்திநாதர் சபையின் 4 மேற்றிராணிமார்களை தன்னுடன் மதிய உணவு அருந்த அழைப்பு விடுத்தார்.*

***2000 - இன்று வரை :*** *சபையின் அதிசிரேஷ்டர் வந்.பெர்நார்டு ஃபெல்லே ஆண்டகை விவேகத்துடன் ரோமை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்தாலும், அதிமேற்றிராணியார் மிக.வந். லெஃபவர் ஆண்டகையவர்கள் நடந்து, காட்டிச் சென்ற பாரம்பரிய விசுவாச சத்தியங்களை திருச்சபையில் மீண்டும் நிலை நிறுத்த வலியுறுத்தி வந்து கொண்டிருந்தார்.*

***2009 ஜனவரி 24:*** *அர்ச். 10- ம் பத்திநாதர் சபையின் 4 மேற்றிராணிமார்கள் மீதான "திருச்சபை விலக்கத்தை" ரத்து செய்து ரோமை மேற்றிராணிமார்களின் திருச்சங்கம் ஆணையைப் பிறப்பித்துள்ளது!*

# உலகமெங்கிலும் வியாபித்துள்ள அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபையின் நிலவரம்.

(2008, நவம்பர் 1 நாளய புள்ளிவிபரத்தின்படி)

*குருமடங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 6*

- அர்ச். பத்தாம் பத்திநாதர் சர்வேதேச குருமடம், ஈக்கோன், சுவிட்சர்லாந்து.
- அர்ச். தாமஸ் அக்குவினாஸ் குருமடம், வினோனா, மின்னசோட்டா, அமெரிக்க ஐக்கிய நாடுகள்.
- திருஇருதய குருமடம், ஸைய்ட்ஸ்காஃபன், ஜெர்மனி.
- இணைமீட்பராகிய தேவமாதாவின் குருமடம், லா ரேகா, அர்ஜெண்டினா.
- திருச்சிலுவை குருமடம், கோல்பன், ஆஸ்திரேலியா.
- அர்ச். மரிய வியானி அருளப்பர் குருமடம், ஃப்ளாவிங்கி, பிரான்ஸ்.

*மாகாணங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 14*
*சுயாதீன மடங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 3*
*குருக்கள இல்லங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . 159*
*பூசைத் தளங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 725*
*பல்கலைக்கழகங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . 2*
*பள்ளிக்கூடங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 88*
*முதியோர் இல்லங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . 7*
*மேற்றிராணியார்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . 4*
*குருக்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 491*
*குருமாணவர்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 215*
*துறவற சகோதரர்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . 117*
*கன்னியாஸ்திரிகள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . 164*
*அர்ப்பணச் சகோதரிகள் . . . . . . . . . . . . . . . . . . . . 80*
*அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை குருக்கள் வாழும் நாடுகளின் எண்ணிக்கை . . . . . . . . . . . 31*
*பயணம் மேற்கொண்டு அப்போஸ்தலிக்க அலுவலை நிறைவேற்றும் நாடுகளின் எண்ணிக்கை . . . . . . . . . . . . 32*




குருமடம் (ஈக்கோன், சுவிட்சர்லாந்து)



சகோதரர்கள்



குருக்கள் இல்லம் (பாளையங்கோட்டை)






பள்ளிக்கூடம் (கான்சாஸ், அமெரிக்கா)



கன்னியர்




நவசந்நியாச கன்னியர் மடம் (புரோவெர்வீல் – அமெரிக்கா)

# திருச்சபையின் அதிகாரப்பூர்வமாக ஸ்தாபிக்கப்பட்ட அர்ச். 10-ம் பத்திநாதர் சபை (சில ஆவணச் சான்றுகள்)

✠ ÉVÊCHÉ ✠
DE LAUSANNE
GENÈVE ET
✠ FRIBOURG ✠

Par les présentes, Nous, François CHARRIERE, Evêque de LAUSANNE, GENEVE et FRIBOURG, confirmons l'autorisation que Nous avions accordée à S.E.Monseigneur Marcel LEFEBVRE, dans l'audience du 6 juin 1969, soit : d'ouvrir à FRIBOURG une Maison de caractère international destinée à recevoir des Aspirants au Sacerdoce qui suivent les Cours de l'Université.

மாதாணங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 14

Nous implorons sur ces futurs Prêtres et sur ceux qui veillent à leur formation les Bénédictions de Dieu.

Fait en notre Evêché de FRIBOURG
le 18 août 1970

+ François Charrière évêque
Lausanne Genève et Fribourg

(சுவிட்சர்லாந்து – ஃபிரிபார்க் மற்றும் ஜெனிவா மேற்றிராணியார் வந். பிரான்சிஸ் ஷெரியோர் ஆண்டகையின் குருமட அங்கீகாரப் பத்திர நகல்)

## First written confirmation authorizing an international seminary to Archbishop Lefebvre (August 18, 1970)

By these presents, We, François Charrière, Bishop of Lausanne, Geneva and Fribourg, confirm the authorization which We gave to His Excellency Msgr. Marcel Lefebvre, in an audience on June 6, 1969: to open at Fribourg an international house for candidates for the priesthood who will study at the University.

We implore for these future priests and on those who oversee their formation the blessings of Almighty God.

At our palace in Fribourg, August 18, 1970

François Charrière, Bishop of Lausanne, Geneva and Fribourg

## Decree of Erection of the International Priestly Society of St. Pius X (November 1, 1970)

Given the encouragements expressed by Vatican Council II, in the decree *Optatum Totius*, concerning international seminaries and the distribution of the clergy;

Given the urgent necessity for the formation of zealous and generous priests conforming to the directives of the cited decree;

Confirming that the Statutes of the Priestly Society correspond to its goals:

We, François Charrière, Bishop of Lausanne, Geneva and Fribourg, the Holy Name of God invoked and all canonical prescriptions observed, decree what follows:

1. The "International Priestly Society of Saint Pius X" is erected in our diocese as a "*Pia Unio.*"
2. The seat of the Society is fixed as the Maison St. Pie X (St. Pius X House), 50, rue de la Vignettaz in our episcopal city of Fribourg.
3. We approve and confirm the Statutes, here joined, of the Society for a period of six years *ad experimentum*, which will be able to be renewed for a similar period by tacit approval; after which, the Society can be erected definitely in our diocese by the competent Roman congregation.

We implore divine blessings on this Priestly Society that it may attain its principal goal which is the formation of holy priests.

Given at Fribourg, in our palace.

November 1, 1970, on the Feast of All Saints.
+François Charrière

✠ ÉVÊCHÉ ✠
DE LAUSANNE
GENÈVE ET
✠ FRIBOURG ✠

Décret d'érection
de la "Fraternité Sacerdotale Internationale Saint Pie X"

Etant donné les encouragements exprimés par le Concile Vatican II, dans le décret "Optatum totius", concernant les Séminaires internationaux et la répartition du clergé;

étant donné la nécessité urgente de la formation de prêtres zélés et généreux conformément aux directives du décret suscité;

constatant que les statuts de la Fraternité Sacerdotale correspondent bien à ces buts :

Nous, François Charrière, Evêque de Lausanne, Genève et Fribourg, le Saint Nom de Dieu invoqué, et toutes prescriptions canoniques observées, décrétons ce qui suit :

1) Est érigée dans notre diocèse au titre de "Pia Unio" la Fraternité Sacerdotale Internationale Saint Pie X.
2) Le siège de la Fraternité est fixé à la Maison Saint Pie X, 50, route de la Vignettaz, en notre ville épiscopale de Fribourg.
3) Nous approuvons et confirmons les statuts ci-joints de la Fraternité pour une période de six ans "ad experimentum", période qui pourra être suivie d'une autre semblable par tacite reconduction; après quoi, la Fraternité pourra être érigée définitivement dans notre diocèse ou par la Congrégation Romaine compétente.

Nous implorons les Bénédictions divines sur cette Fraternité Sacerdotale afin qu'elle atteigne son but principal qui est la formation de saints Prêtres.

Fait à Fribourg en notre Evêché le
1er novembre 1970, en la fête de la Toussaint.

+ François Charrière, évêque
+ François Charrière,
Evêque de Lausanne, Genève et Fribourg

வந். பிரான்சிஸ் ஷெரியோர் ஆண்டகையின் அர்ச். 10–ம் பத்திநாதர் சபை ஸ்தாபக அங்கீகாரப் பத்திரங்கள்.